# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2003, பங்குனி 6 உ (19-3-72) ஞாயிறு 1391 ஸபர் 3 புத்தகம் 25 இதழ் 17


## 'தமிழ் ஈழமே எமது தாரக மந்திரம்'

### பிரதேசப் பிரிவினைகளுக்கு இடம்தரோம்! மட்டுநகர் முதல்வர் கண்டனம்!


"தமிழ் பேசும் மக்களை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்று கூறுபோடும் சதிநோக்குடன் 'யாழ் தேஷ்' என்றும் 'மட்டக்களப்பு தேஷ்' என்றும் ஏரிக்கரை நிறுவனமும், ஆதிக்க புரியினரும் புதிய கோஷங்களை தாமாகவே உருவாக்கிப் பரப்பி வருகிறார்கள் —

"நான் திட்டவட்டமாக கூறுகிறேன் — ஈழத் தமிழ் நிலத்தை 'யாழ்தேஷ்' 'மட்டக்களப்பு தேஷ்' என்று கூறுபோடுவதற்கு நானோ, நான் சார்ந்திருக்கும் இயக்கமோ ஒரு துளியும் இடம் தரமாட்டோம்!

"எங்கள் கோரிக்கை 'யாழ் தேஷோ' 'மட்டக்களப்பு தேஷோ' அல்ல — தமிழ் ஈழமே எங்கள் தாரக மந்திரம்; தமிழ் ஈழத்தில் தமிழரசு காணப் போராடுவதே நமது நோக்கம் —



( 4ம் பக்கம் பார்க்க )



# கருணாநிதி-செல்வா கனிவான சந்திப்பு!

இலங்கைவாழ் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் வழிகாட்டியும் தலைவருமான பெரியவர் தந்தை செல்வா அவர்களும் நாலரைக் கோடி தமிழ் மக்களின் தளநாயகரான தமிழ் நாட்டு முதல்வர் கலைஞர் கருணாநிதியும் சென்னையில் கோபாலபுரத்திலுள்ள முதல்வரின் இல்லத்தில் சந்தித்துப் பேசிய காட்சி உலகத் தமிழர்களின் வரலாற்றில் ஓர் அழியாத முக்கிய இடத்தைப் பிடித்துவிட்டது.

புதிய அரசியல் சட்டத்தின்கீழ் ஈழத் தமிழர்களுக்கு ஏற்படவிருக்கும் பேராபத்துக்களையும் ஈழத் தமிழ் மக்களின் கோரிக்கையிலுள்ள நியாயத்தையும் பொதுவாக இந்திய மக்களுக்கும் குறிப்பாக தமிழ் நாட்டு மக்களுக்கும் எடுத்து விளக்குவதற்காகசென்னை சென்றிருந்த தமிழரசுத் தந்தை திரு. செல்வா அவர்கள் 22-2-72 மாலை 6.00 மணிக்கு தமிழக முதல்வரும் நாலரைக்கோடி தமிழ் மக்களின் நாயகனுமாகிய கலைஞர் டாக்டர். மு. கருணாநிதி அவர்களை சென்னை கோபாலபுரத்திலுள்ள கலைஞரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

கலைஞரைச் சந்திப்பதற்காக தந்தை செல்வாவுடன் தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், சுதந்திரன்

(4-ம் பக்கம் பார்க்க)

## விற்பனையாளர் கவனத்துக்கு...!

நாடெங்கிலுமிருந்து ஏராளமான சுதந்திரன் வாசகர்கள் சுதந்திரன் தங்களுக்கு கிடைப்பதில்லையென நாள்தோறும் புகார் செய்துவருகிறார்கள். எனவே வாசகர்களின் குறையினைப் போக்கி, அவர்களுக்கு தடங்கலின்றி பத்திரிகை கிடைக்கக் கூடிய முறையில் சுதந்திரன் பிரதிகளை அதிகரிக்கும்படி விற்பனையாளர்களை கேட்டுக்கொள்ளுகிறோம். கூடுதல் தேவையான பிரதிகளுக்கு உடனே எழுதுங்கள்!

— நிர்வாகி

## 'ஈழத்து நாவலர்'

### தளபதிக்கு தமிழகம் பாராட்டு



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளரும் சொல்லேருழவருமாகிய தளபதி அ. அமிர்தலிங்கத்துக்கு 'ஈழத்து நாவலர்' என சிறப்பு பட்டமளித்து கௌரவித்துள்ளனர் தமிழ் நாட்டு மக்கள்.

தமிழக ஏடுகள் அனைத்தும் திரு. அமிர்தலிங்கத்தை 'ஈழத்து நாவலர்' என்றே குறிப்பிட்டிருந்தன பொது நிகழ்ச்சிகளிலும் 'ஈழத்து நாவலர்' என்றே திரு. அமிர்தலிங்கம் தமிழகத்தில் அறிமுகப் படுத்தப்பட்டார்.

இலங்கையின் சிறீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்குப் பின் திரு அமிர்தலிங்கம் அவர்களே 'நாவலர்' என்று தமிழக மக்களால் அழைக்கப்படும் பெருமையை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வர்த்தகத்துக்காக வந்து குடியேறியவராம் தமிழர்கள்!

'ஈழத்தமிழர்கள் வர்த்தகத்துக்காக இலங்கைக்கு வந்தேறிய குடிகள்' — இவ்வாறு கல்வியமைச்சு வெளியிட்டுள்ள 6ம் வகுப்பு பாடத்திட்டத்தில் கூறப்பட்டிருப்பது கண்டு தமிழ் மக்கள் கொதிப்படைந்துள்ளனர். இது தமிழ் மக்களை அவமதிக்கும் செயல் என தமிழ் மக்கள் கருதுகிறார்கள்.

சீன தேசத்தில் எவ்வாறு குழந்தைப் பருவத்தில் இருந்தே மாவோவின் கம்யூனிசத் தத்துவங்கள் கற்பித்து வரப்படுகின்றனவோ அவ்வாறே எம் இளம் சந்ததியினருக்கும் தமிழர்கள் வந்தேறு குடிகள் வியாபார நோக்குடன் வந்தவர்கள் என்ற அபாண்டமான பொய்யை இளம் உள்ளங்களின் மனதில் பதியவைப்பதற்காகவா கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள 6ம் வகுப்பு பாடத்திட்டத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது என்று அவர்கள் கேட்கிறார்கள்.

கல்வி அமைச்சின் வெளியீடாகிய "சமூகக்கல்வி." 1972 பாடத்திட்டம், பருவம் 1, தரம் 6, பக்கம் 28ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:—

5. சரித்திரப் பின்னணி.

5. 1. ஆரியர்கள் வருகை. சிங்கள இனத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

(4-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ் நாட்டில் செல்வா சுற்றுலா!

தமிழரசுத் தந்தை செல்வா அவர்கள் கடந்த திங்கள் மேற்கொண்ட ஒரு வார தமிழகச் சுற்றுலா பயனும் உற்சாகமும் அளிப்பதாக அமைந்திருந்தது. ஈழத் தமிழினத்தின் இன்றைய (தணிக்கை) நிலையை தமிழக மக்களுக்கும் தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் தமிழ் நாட்டுப் பத்திரிகையாளர்களுக்கும் எடுத்து விளக்கவும், தமிழ் நாட்டின் அனுதாபத்தையும் தார்மீக ஆதரவையும் இலங்கைத் தமிழர் பால் முழு அளவில் பெற்றுக்கொள்ளவும் செல்வாவின் சுற்றுலா பயன் பட்டது.

தந்தை செல்வாவின் செய்திகளுக்கு தமிழ் நாட்டு ஏடுகள் அனைத்தும் அதிக முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்திருந்தன. சென்னை ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், மெயில், டெக்கான் ஹெரால்ட், தினமணி, தினத்தந்தி, மாலை முரசு, முரசொலி, தென்னகம், நவமணி, விடுதலை, ஆகிய நாளேடுகள் தந்தை செல்வா பற்றிய செய்திகளை படங்களுடன் சிறந்த முறையில் வெளியிட்டிருந்தன.

## 19-2-72

செல்வா அவர்கள் 19-2-72 காலை 10 மணிக்கு பலாலி விமான நிலையத்திலிருந்து திருச்சி நோக்கி புறப்பட்டார். செல்வாவுடன், பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், அவரது துணைவியார் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் ஆகியோரும் உடன் சென்றனர். இரு நாட்களுக்கு முன்பே கொழும்பு கிளைத் துணைச் செயலாளர் திரு. ஆர். இராசரத்தினம் தமிழ்நாடு சென்று தந்தையின் தமிழக விஜயத்திற்கான ஏற்பாடுகளை கவனித்தார்.

செல்வாவும் அவரது குழுவினரும் திருச்சி விமான நிலையத்தில் முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. எம். எஸ் வெங்கடாசலம் எம். ஏ. பி. எல், இ. தி. மு. க. முன்னாள் செயலாளர் திரு. ஏ. எஸ். வணைவத்தம்பி ஆகியோரால் வரவேற்கப்பட்டனர். தந்தை செல்வாவுக்கு முத்தமிழ்க் காவலர் சந்தன மாலையொன்றைச் சூட்டி வரவேற்றார்.

அன்று மதியம், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் தமது இல்லத்தில் தந்தைக்கும் ஏனையோருக்கும் விருந்தளித்து கௌரவித்தார்.

பிற்பகல் 4 மணிக்கு தந்தை செல்வாவும் அவரது குழுவினரும் திருச்சியிலிருந்து காரில் புறப்பட்டு இரவு 1 மணிக்கு சென்னையை அடைந்தனர். அங்கு உலக தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. ஜனார்த்தனம் எம். ஏ., முரசொலி அடியார் ஆகியோர் வரவேற்றனர். சென்னை சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் செல்வாவும் அவரது குழுவினரும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 20.2.72 நிகழ்ச்சிகள்

காலை, ஈர்மாத்தமிழர்கள் செல்வா இருக்குமிடம் தேடி வந்து ஆளுயர மாலையொன்றைத் தந்தைக்கு அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். பத்து மணிக்கு தந்தை செல்வா, அமிர்தலிங்கம் தம்பதிகள், சுதந்திரன் ஆசிரியர், ஆகியோர் சென்னையில் அறிஞர் அண்ணா மீளாத்துயில் ஆழ்ந்திருக்கும் சமாதிக்கு சென்று மலர் வளையம் வைத்து வணங்கினர். செல்வா குழுவினருடன் சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. நீலநாராயணன் எம். எல். சி. முரசொலி அடியார், ஜனார்த்தனம் ஆகியோரும் சென்றிருந்தனர்.

இதன் பின் சென்னை நுங்கம் பாக்கத்திலுள்ள அண்ணா இல்லத்துக்கு செல்வா குழுவினர் சென்றபோது அண்ணாவின் இரண்டாவது மருமகள் திருமதி சரோஜா பரிமளம் அவர்களை வரவேற்று உபசரித்தார்.

அங்கு அண்ணா உபயோகித்த பொருட்களை தரிசித்ததுடன், அவரது நூல் நிலையத்தையும் பார்த்தனர்.

இதன் பின் காஞ்சிபுரத்திலுள்ள அண்ணாவின் இல்லத்துக்கு தந்தை செல்வாவும் அவரது குழுவினரும் விஜயம் செய்தனர். அங்கு அண்ணாவின் இரண்டாவது மருமகள் திருமதி விஜயா இளங்கோவன் செல்வாவை வரவேற்றார். அண்ணாவின் தாயார் திருமதி பங்காரு அம்மாளையும் செல்வா சுகம் விசாரித்தார். அண்ணா எழுதிய நூல்கள் சிலவற்றை திருமதி விஜயா தந்தை செல்வாவுக்கு அன்பளிப்பாக வழங்கியதுடன், பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தார்.

அண்ணா நடத்திய 'திராவிடநாடு' ஏட்டின் பொறுப்பாசிரியராக இருந்தவரும் வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த லடவியடைட்டைச் சேர்ந்தவருமான சமத்துற சிவானந்த அடிகள் நம் செல்வாவை காஞ்சிபுரம் அண்ணா வீட்டில் கண்டு குசலம் விசாரித்தார்.

இரவு 7 மணிக்கு சென்னை அண்ணா கலையரங்கில் நடைபெற்ற முரசொலி அடியாரின் 'தங்கவங்கம்' நாடகத்துக்கு செல்வா தலைமை தாங்கினார். திருமதி அமிர்தலிங்கம் ஈழத்தமிழ் தேசிய கீதம் பாடினார். திரு. அமிர்தலிங்கம் கோவை மகேசன் ஆகியோர் நாடகத்தைப் பாராட்டி உரையாற்றினர்.

## 21-2-72

காலையில் தமிழ்நாடு நலத்துறை அமைச்சர் அன்பழகன், சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம், கூட்டுறவு அமைச்சர் கி. பா. ஆதித்தனார், உணவு அமைச்சர் ப. உ. சண்முகம், அன்பில் தர்மலிங்கம், ஹார்த் தம்மான் சைமன் ஆகியோரை சந்தித்துப்பேசினார் தந்தை செல்வா.

மாலை கிண்டி ராஜபவனத்தில் தமிழக ஆளுனர் கே. கே. ஷாவுடன் செல்வா கலந்துரையாடினார். இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி தமிழக ஆளுனருக்கு தந்தை செல்வா எடுத்து விளக்கினார். இதன்பின் முன்னாள் முதல்வர் திரு பக்தவச்சலம் அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

## 22-2-72

அமைச்சர் என். வி. நடராசன், பெரியார் ஈ. வெ. ரா, முஸ்லீம் லீக் தலைவர் காயிதே இஸ்மாயில் சாகிபு ஆகியோரைச் சந்தித்தது. மதியம் சென்னை சட்டக் கல்லூரி மாணவர் மத்தியில் இலங்கையின் புதிய அரசியல் சட்டம்' எனும் தலைப்பில் புதிய அரசியல் சட்டம் பற்றி பொதுச் செயலாளர் அ. அமிர்தலிங்கம், அழகான ஆணித்தரமான உரையொன்றை நிகழ்த்தினார்.

தந்தை செல்வா அங்கு வந்து சேர்ந்த சமயம் வானைப் பிளக்கும் உணர்ச்சிமயமான வாழ்த்து ஒலிகளுடன் மாணவர்கள் தந்தையை வரவேற்ற காட்சி மெய் சிலிர்க்க வைப்பதாக இருந்தது.

மாலை 5 மணிக்கு ஆனந்த விகடன் மணியன் சிற்றுண்டி விருந்தளித்து தந்தை செல்வாவைக் கௌரவித்தார். மாலை 6 மணிக்கு கோபாலபுரத்திலுள்ள கலைஞர் இல்லத்தில் கலைஞர் டாக்டர் முதல்வருடன் செல்வா உரையாடினார்.

இரவு நடிகர் அசோகன் தந்தை செல்வா குழுவினருக்கு விருந்தளித்தார்.

## 23-2-72

காலை பத்திரிகை நிருபர்களின் மாநாடு நடைபெற்றது. பி.டி.ஐ. யூ. என். ஐ. பிரதிநிதிகளும் நவமணி, நவசக்தி, நாத்திகம், முரசொலி, இந்து, எக்ஸ்பிரஸ், மெயில், தென்னகம், அலை ஓசை, மாலைமுரசு, தினத்தந்தி, ஆகிய பத்திரிகைகளின் நிருபர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். தந்தை செல்வாவும், பொதுச் செயலாளரும் நிருபர்களின் கேள்விகளுக்கு தெளிவான விளக்கம் அளித்தனர்.

தந்தை செல்வாவுக்கும் பொதுச் செயலாளருக்கும் பிரபல தொழில் அதிபர் பொள்ளாச்சி மகாலிங்கம் மதிய விருந்து அளித்ததுடன் சில புத்தகங்களையும் அன்பளிப்பு செய்தார்.

மாலை 4 மணிக்கு தமிழ் நாடு அரசு திரைப்பட நிறுவனத்தில் செல்வாவும் ஏனையோரும் 'அண்ணாவின் இறுதி யாத்திரை' உலகத் தமிழ் மாநாடு ஆகிய திரைப்படங்களை பார்வையிட்டனர்.

இரவு முரசொலி அடியார் விருந்தளித்தார்.

## 24-2-72

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், தமிழக கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன், அமைச்சர் க. இராஜாராம், சட்டமன்றத் தலைவர் கே. ஏ. மதியழகன் ஆகியோரை செல்வாவும் மற்றையோரும் சந்தித்துப் பேசினர். நாவலர் நெடுஞ்செழியன் பொன்னாடை போர்த்தி தந்தை செல்வாவை வணங்கினார். ஏனையோருக்கும் நாவலர் பொன்னாடை போர்த்தினார்.

திரு. சி. சி. தண்டபாணி எம். பி. தலைமையில் தி.மு.க. எம். பிக்கள் கோஷ்டியொன்று செல்வாவைச் சந்தித்து உரையாடியது.

இரவு கோகலே ஹாலில் உலக இளைஞர் பேரவை சார்பில் இரா. ஜனார்த்தனம் தலைமையில் வரவேற்பு கூட்டத்தில் பங்கேற்பு.

## 25-2-72

காலை, விஜயா — வாகினி ஸ்டுடியோவில் கோவை இராஜமாணிக்கம் எம். எல். சியின் 'பூங்கோதை பிக்சர்ஸ்' திரைப்படத்துக்கான படப்பிடிப்பை செல்வா தொடக்கி வைத்தார். ஜெமினி — சரோஜாதேவி நடிக்கும் காட்சியொன்று படமாக்கப்பட்டது.

இதன் பின் மெயில், 'டெக்கான் ஹெரால்ட்' ஏடுகளின் நிருபர்களுக்கு தந்தை செல்வா சிறப்புப் பேட்டியளித்தார். முரசொலி மாறன் எம். பியும் தமது 'றைசிங் சன்' ஏட்டுக்காக செல்வாவிடம் சிறப்பு பேட்டி எடுத்துக்கொண்டார்.

மாலை 4 மணிக்கு ராமாவாரத்தில் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்களை சென்று பார்த்து உரையாடினர். எம். ஜி. ஆர். சந்தன மாலையிட்டு செல்வாவை வரவேற்றார். சென்னை மேல் சபைத் தலைவர் திரு. சி. பி. சிற்றரசு, திருமதி இராணி அண்ணா ஆகியோரையும் சென்று பார்த்தனர்.

5.30 மணிக்கு சென்னை மாநகராட்சி வரவேற்பில் செல்வா பங்கேற்றார். இரவு கோகலே மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கழகக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம் உரை நிகழ்த்தினார்.

இரவு 9.30 தூத்துக்குடி எக்ஸ்பிரசில் சென்னையிலிருந்து திருச்சிக்கு புறப்பட்டனர் செல்வா குழுவினர்.

## 26-2-72

காலையில் திருச்சி ஸ்டேசனில், தி. மு. க. திருச்சி மாவட்ட தலைவர் பாராங்குசம், செயலாளர் வெங்கடாசலம், நாகசுந்தரம், திருச்சி பாண்டுரங்கன் ஆகியோர் செல்வாவுக்கு மாலைசூட்டியும், தி.மு. கழகத் துண்டுகள் போர்த்தியும் வரவேற்றனர்.

10.30க்கு காமராசரைச் சந்திக்கவென புதுக்கோட்டை சென்றது. பிற்பகல் 3.10 விமானத்தில் திருச்சியிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பினார் தந்தை செல்வா.

# புதிய அரசியல்சட்டத்துக்கு எதிராக உள்ளூராட்சிமன்றங்கள் கண்டனக் குரல்!

## தொடர்ந்து கிளம்பட்டும்! துரோகிகளும் திருந்தட்டும்!

தமிழினத்தைக் குழிபறிக்கும் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்தும், புதிய அரசியல் சட்டத்துக்கு ஆதரவாக தமிழ்ப் பிரதிநிதிகள் எவரும் ஒப்பமிடக் கூடாதென்றும் ஈழத் தமிழ் நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றி வருகின்றன.

தமிழினத்தின் அடிமைச் சாசனத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்து கண்டனத் தீர்மானங்களை நிறை வேற்றும் ஈழத் தமிழ் நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களை பெரிதும் பாராட்டுகிறோம்.

மட்டக்களப்பு மாநகராட்சி மன்றத்தில் புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்க வேண்டும் என்கின்ற தீர்மானத்தை கொண்டு [illegible] மாநகராட்சி [illegible] பினர் திரு. எம். ஜி. ஜெய[illegible] சிங்கம் ஏற்கெனவே முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

ஆளுங்கட்சியின் அடிமையான வட்டுக்கோட்டை பா. உ. திரு. ஆ. தியாகராசாவின் சொந்த ஊரான காரைநகர் வடக்கு, காரைநகர் தெற்குப் பகுதி ஊராட்சி மன்றங்கள் புதிய அரசியல் சட்டத்துக்கு ஆதரவாக திரு. தியாகராசா வாக்களிக்கக் கூடாதென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன.

கோப்பாய்த் தொகுதியிலுள்ள புத்தூர் ஊராட்சி மன்றமும் புதிய அரசியல் சட்டத்தை தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் எதிர்க்க வேண்டும் என்று ஒருமனதாக தீர்மானித்திருக்கிறது.

கரைச்சி கி. ச. தீர்மானம்

ஆளுங் கட்சியின் மற்றோர் ஆதரவாளராான திரு. ஆனந்தசங்கரி பிரதிநிதித்துவம் வகிக்கும் கிளிநொச்சித் தொகுதியிலுள்ள கரைச்சி மன்றமும் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

'கரைச்சிப் பகுதி கிராமச் சபை மாதாந்தக் கூட்டம் 3-2-72ல் நடைபெற்ற சமயத்தில் உருத்திரபுரம் 8ம் வாய்க்கால் பிரதிநிதி யோண்ராசா அவர்களால் அரசியல் சாசனத்தில் ஒப்பம் இடவேண்டாம் என கிளிநொச்சிப் பகுதி பாராளுமன்ற உறுப்பினரை கேட்கும்படி கொண்டுவந்த பிரேரணையை அச்சபையில் வீற்றிருந்த ஆறு பிரதிநிதிகள் சாதகமாகவோ, அன்றேல் பாதகமாகவோ வாக்களிக்க மனமில்லாது வெளியேற ஆனையிறவுப் பிரதிநிதி செ. சந்திரலிங்கம் அவர்களால் தீர்மானிக்கப்பட்டு அனுப்பப்பெற்றுள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டில் நாம்!

அன்பு நண்பா,

உனக்கு மடல் தீட்டி—உன்னுடன் அளவளாவி — ஒரு திங்களுக்கு மேலாகிவிட்டது என்ருலும் உன் போன்ற நண்பர்களும் அன்புத் தம்பிமார்களும் நான் தவருமல் எழுதும் மடல்களை நான் பெற்று உவகையும் புதிய தெம்பும் உணர்ச்சியும் பெற்றுவருகிறேன். தங்களது உள்ளத்து உணர்வுகளையும் குமுறல்களையும் எனக்கு எழுதி அனுப்புகின்ற நண்பர்களுக்கு தனித்தனியே பதில் எழுதிட சில வேளைகளில் நான் தவறியிருந்திடினும், அவர்கள் தந்திடும் கருத்துக்களை ஊன்றிக் கவனித்து படித்து வருகிறேன்.

ஒரு திங்களாக எனது மடல் காணுது நீ சற்று சலிப்படைந்திருப்பாய் என்பது எனக்குத் தெரியும் நண்பா,— நான் மட்டும் என்னவாம்? உனக்கு மடல் திட்டாவிட்டால் எனக்கும்கூடத்தான் உற்சாகமும் சுவையும் குன்றிப் போய்விடுகிறது. அப்படியானல் ஏன் இவன் மடல் தீட்டவில்லை — சும்மா 'முகமனுக்கு' கூறுகிருனே என்று எண்ணிடுவாய்; ஒரே இரத்தத்தின் இரத்தமாக — சதையின் சதையாக வாழ்ந்துவரும் உனக்கும் எனக்கும் 'முகமன்' என்ன வேண்டிக் கிடக்கிறது?

அண்ணுவின் தமிழ்நாட்டுக்கு மீண்டும் சென்றிருந்தேன் —நம் தந்தை செல்வாவுடன்-சென்ற திங்கள்! ஆம்! பெரியவர் செல்வாவுடனும் பொதுச்செயலாளர் அண்ணன் அமிர்தலிங்கத்துடனும் தமிழ்நாடு சென்று ஈழத்தமிழினத்தின் சிரழியும் நிலையை பாரறிய வைத்திடும் பணியில் ஈடுபட்டுவிட்டு புதிய உற்சாகம், புதிய நம்பிக்கைகளுடன் ஈழம் திரும்பியிருக்கிறேன்.

"கருணுநிதி கையைவிட்டார்; காமராசர் காலைவாரி விட்டார்; தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் உதவி தர மறுத்துவிட்டார்கள்; செல்வா சிந்தைநொந்து டில்லி விஜயத்தையும், டாக்கா விஜயத்தையும் ரத்துசெய்துவிட்டு திரும்பிவிட்டார்"; என்றெல்லாம் இந்நாட்டில் ஓர் ஈனத்தினசரி, சாக்கடையில் தொட்டு கக்கியிருந்த நஞ்சு கண்டு நீ எள்ளளவும் வேதனைப்பட்டிருக்கமாட்டாய் என்பதனை நான் அறிவேன் — ஏனெனில் அந்த ஏடு நமக்கெதிரான ஏடு; நம்மை அழிப்பதையே குறிக்கோளாகக்கொண்ட ஏடு! பொய்யையே தனது மூலதனமாகக் கொண்ட ஏடு; என்பதையெல்லாம் அறிந்தவன் நீ!

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணுநிதி எம்மிடம என்ன கூறினர்; ஏனைய அரசியல் தலைவர்கள் எப்படி எமது பிரச்சினைகளை அணுகினர்கள் என்பது அவர்களுடன் உரையாடிய நம்மில் குறிப்பிடத்தக்க ஒரு சிலருக்கு தெரியுமே தவிர—தெருவால் செல்லும்சோற்றுநாய்களுக்கு என்ன தெரியும்?

நாம் உதவி கோரிப் போனேமாம்; உதவி இல்லையென்று கைவிரித்து விட்டார்களாம்; என்றெல்லாம் எழுதியிருக்கிறது அந்த சனப்பிறவி! நாம் யாரிடமும் உதவி கோரிச்செல்லவில்லை; நமமுடைய (தணிக்கை) நிலையை (தணிக்கை) கடியை நம் உடன் பிறப்புக்களாகிய தமிழக மக்களுக்கு எடுத்துச் சொல்லவும், நமது உரிமைப் போராட்டத்துக்கு அவர்களது ஆதரவையும், அனுதாபத்தையும் திரட்டவுமே நாம் அங்கு சென்றிருந்தோம். எனவே நாம் எந்த நோக்குடன் சென்றிருந்தோமோ, அந்த நோக்கத்தில் பரிபூரண வெற்றியடைந்தோம் — இதனைப் புரியாத மண்டைகளுக்காக இங்கே கூறிடவில்லை - உன்போன்ற நம் இயக்க நண்பர்களுக்காகவே கூறுகிறேன்—

நாம் நமது இலட்சிய வெற்றிக்காக நமது சொந்தபலத்தை நம்பி போராடி வருகிறேமேதவிர. வேறு யாருடைய உதவியையும் எதிர்பார்த்தல்ல- என்பதனை நம் எதிரிகளும் புரிந்துகொண்டிடவேண்டும்.

நண்பா, தமிழகத்தில் நாம் இரண்டு கிழமைகள் தங்கியிருந்தோம்—இந்த இரண்டு கிழமைகளும் நாம் சந்தித்த எந்த ஒரு அரசியல் தலைவராவது, எந்த ஒரு பத்திரிகையாளராவது, எங்கள் நிலையை அனுதாபத்துடனும் ஆதரவுடனும் அணுகினர்களே தவிர — ஒருவராவது எங்கள் கோரிக்கை தவருனது; நீதி நியாயமற்றது என்று கூறிடவில்லை யென்பதனை உனக்குச் சுட்டிக் காட்டிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்—

தமிழக ஆளுனர் கே. கே. ஷா, முதல்வர் டாக்டர் கலைஞர் கருணுநிதி, நாவலர் டாக்டர் நெடுஞ்செழியன், இந்திரா காங்கிரசைச்சேர்ந்த முன்னள் முதலமைச்சர் பக்தவச்சலம், அமைச்சர்கள் என். வி. நடராசன், ப. உ. சண்முகம், ஆதித்தனர், அன்பழகன், சட்டமன்றத் தலைவர் கே. ஏ. மதியழகன், மேலவைத்தலைவர் சி. பி. சிற்றரசு, முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், இஸ்லாமியத் தலைவர் இஸ்மாயில் காயிதே மில்லத், பெரியார் ஈ. வெ. ரா, முரசொலி மாறன், மற்றும் தி. மு. கழக பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், புரட்சி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோருட்பட பலரைச் சந்தித்து உரையாடினேம்; ஈழத் தமிழினம் படும் அவதியை எடுத்து விளக்கினேம்; எல்லோருமே எமது கோரிக்கையிலுள்ள நியாயத்தை புரிந்துகொண்டு ஏற்றுக் கொண்டார்கள்!

தமிழகத்து ஏடுகள் —இந்து. எக்ஸ்பிரஸ், மெயில் டெக்கான் ஹெரால்ட், தினமணி, தினத்தந்தி, மாலை முரசு, நவமணி, விடுதலை, முரசொலி, நம்நாடு, அலை ஓசை, தென்னகம் போன்ற நாளேடுகள் தந்தை செல்வாவின் பேட்டிகளையும், அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளையும் அதிமுக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்திருந்ததை நீ அறிந்திடின் மகிழ்ச்சியில் திளைத்திடுவாய் என்பதை நான் அறிவேன்!

35 இலட்சம் ஈழத்தமிழினத்தின் முதுபெரும் தலைவராம் நம் தந்தை செல்வா அவர்களை நாலரைக் கோடி தமிழ்நாட்டுத் தமிழர்களின் தனித்தலைவராம் கலைஞர் டாக்டர் கருணுநிதி அவர்கள் அரவணைத்து வாஞ்சையுடன் அளவளாவியதை நேரில் காணும்வாய்ப்பினைப் பெற்றேன் — அதுபோது எனக்கேற்பட்ட உள்ளத்து உணர்ச்சி அலைகளை வடித்திட வார்த்தைகள் ஏதுமின்றி தவித்திடுகிறேன்.

தந்தை செல்வாவை கலைஞர் எவ்வளவு தூரம் மதித்தார்; எவ்வளவு அக்கறையுடன் செல்வா கூறிய கருத்துக்களுக்கு செவிமடுத்தார்! கலைஞர் செல்வாவுக்கு என்ன பதில் கூறினர் என்பதெல்லாம்கூட இருந்த எங்களில் சிலருக்கு தெரியுமே தவிர, 'தினசநி'களுக்கு எப்படி தெரிந்திட நியாயமுண்டு?

## அரசியல் மடல்

நண்பா, சென்னையில் நாம் தங்கியிருந்த நாட்களில் நான்கு பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டோம். முரசொலி அடியார் முஜிபுர் ரகுமானுக நடிக்கும் 'தங்க வங்கம்' நாடகம், சென்னை சட்டக்கல்லூரிப் பேச்சு, கோகலே மண்டபத்தில் உலக இளைஞர் பேரவையினரால் அளிக்கப்பட்ட வரவேற்பு, சென்னை மாநகராட்சிமன்ற வரவேற்பு ஆகியவையே அந்த நிகழ்ச்சிகளாகும்!

இந்நிகழ்ச்சிகளின் போதெல்லாம் நம்மை வரவேற்பதில் தமிழ் நாட்டு மக்கள் காட்டிய பேரெழுச்சியும் உற்சாகமும் உணர்வும் நம்மை மெய்சிலிர்த்திட வைத்தது — இதில் இரண்டு நிகழ்ச்சிகளை குறிப்பிட்டுச் சொல்வேன்.

ஒன்று சென்னை சட்டக்கல்லூரியில் புதிய அரசியல் சட்டம் பற்றி 'ஈழத்து நாவலர்' அண்ணன் அமிர்தலிங்கம் உரையாற்றிய போது சட்ட மாணவர்களிடையே காணப்பட்ட புத்தெழுச்சி! (என்ன இது, ஈழத்து நாவலராம்—இஃதென்ன புதிய பட்டம் அமிர்தலிங்கத்துக்கு என்று இங்குள்ள வயிற்றெரிச்சல்காரர்கள் முணு முணுக்கக் கூடும்—தமிழக ஏடுகளிலும், தமிழகத்தில் நடைபெற்ற பொது நிகழ்ச்சிகளிலும் தமிழ் நாட்டு அன்பர்கள் அண்ணனுக்கு சூட்டிய பட்டமே இது)

அமிர்தலிங்கத்தின் எழுச்சியும் உணர்ச்சியும், வலியும் பொலிவும், தெளியும் மிக்க உரையால் கவர்ப்பட்டு தம்மை மறந்திருந்த சட்டக் கல்லூரி மாணவர்கள், தந்தை செல்வா அங்கு வந்த நேரத்தில் எழுப்பிய வாழ்த்து முழக்கம் இருக்கிறதே—அது ஒன்றே போதும் அலைகடலை அடைத்திட! ஆம், 'ஈழத்தின் காந்தியே வருக, தமிழர் தலைவா வருக, தந்தை செல்வா வருக, (தணிக்கை) (தணிக்கை) என்று சட்ட மாணவர் எழுப்பிய கோஷங்கள் அடங்க 10 மணித்துளிகளுக்கு மேல் பிடித்தது—அவ்வளவு எழுச்சி, அவ்வளவு ஆவேசம்—இத்தனைக்கும் அவர்கள் தமிழ் நாட்டு மாணவர்கள் — அதாவது 'இந்திய' மாணவர்கள்!!

அடுத்து என் மனதை விட்டகலா மற்றொரு நிகழ்ச்சி கோகலே மண்டபத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் சிலம்புச் செல்வர் [illegible] வீரவுரை! சிலம்புச் செல்வரின் எழுச்சி மிக்க உரை நம் [illegible] அருமருந்தாக மாறி நாடி நரம் பெல்லாம் முறுக்கேற்றி நம் பிச்சை யூட்டும் செந்தேனை இனித்தது!

மற்றொன்றையும் உனக்குக் கூறிட வேண்டும் தான் தூங்கிக்கொண்டிருந்தாலும் தமிழனை தூக்கத்திலிருந்து தட்டியெழுப்பிக்கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணுவின் சமாதிக்கு சென்று அந்தப் பெரிய இதயத்துக்கு அஞ்சலி செய்ததுதான் நாம் செய்த முதல் வேலை! ஆம் தமிழினத்தின் காவல் தெய்வம் அண்ணன் தானே! அண்ணனின் இல்லம் சென்று அவர் உபயோகித்த பேனு, மூக்குக்கண்ணுடி, பொடி, டப்பி போன்ற பொருட்களைத் தரிசித்தோம்... பொங்கி வெழுந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அண்ணுவின் காலணியில் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டேன் — ஆசானின் திருவடிபட்ட காலணி மாணவனுக்கு சுவர்க்கமன்ருே?

நண்பா, தந்தை செல்வாவைப்பற்றி 'முரசொலி' ஏட்டினிலே தோழர் பாண்டியன் எழுதியுள்ள உணர்ச்சி மயமான கட்டுரையின் ஓர் பகுதியை கீழே தருகிறேன் — நீபடித்திட.

'ஈழத்துக் காந்தி என்று அழைக்கப்படும் செல்வா அவர்களைச் சென்னையில், பல தரப்பினரும் பார்த்தனர்;

'இங்குள்ள தமிழ்ச் சமுதாயம், ஏடுகளில் படித்ததுண்டு; வந்தவர்களிடம் கேட்டதுண்டு — செல்வா தலைமையில் நடக்கும் உரிமைப் போராட்டம் பற்றி! ஆனல், இப்படி ஒரு பழுத்த பழந்நிற்கா — நிற்கவும் சக்தியற்ற மனிதருக்கா, அப்படி ஓர் ஆற்றல் என வியந்தனர்!

மாணவர்கள் மட்டுமில்லை; சராசரித் தொழிலாளிகள் மட்டுமில்லை; குடிசை வாழ் தாய்மார்களும் அவரைக் கண்டனர். தம்மை அறியாமலே கையை எடுத்துக் கும்பிட்டனர்!

ஆம்! அந்தக் காந்தச் சக்திதான், அவரது தனித் திறமை!

தமிழரசுக் கட்சியின் வரலாற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளாதோர் அந்தத் தாய்மார்கள், ஏன் அப்படி ஓர் இயக்கம் இலங்கையில் நடப்பதைக் கூட அறியாதோர் கூட அந்தத் தாய்மார்கள்! ஆனல், செல்வாவைப் பார்த்ததும் அவர்கள் கைகள் தாமாகக் குவிந்தன; வணங்கின!

அதைப் பார்த்தபோது, 'இந்த உருவமா 35 லட்சம் தமிழர்களை ஓர் எல்லைக்கோட்டில் — (தணிக்கை) திரட்டி நிறுத்தி வைத்திருக்கிறது?'' என்று வியந்தவர்கள் ஐயம் தெளிந்தனர். புதிய நம்பிக்கை பெற்றனர்,

செல்வா அவர்கள், தமிழர்கட்கு சுயாட்சி உரிமை கேட்கிறார்கள்! உரிமை மறுக்கப்பட்டு-முடிவு பிரிவினையாகிவிடக்கூடாதே என்று அவர்கள் வேதனையோடு குறிப்பிட்டார்கள்!

''முப்பது லட்சம் பேர் உரிமை கேட்கக் கூடாது. உரிமை கேட்கக் குறைந்தது பத்து கோடிப் பேரேனும் வேண்டும்; பதினைந்து கோடிப் பேரேனும் வேண்டும் என்றெல்லாம் கணக்குப் போடுவோர் மனிதரல்லர்!

''உரிமை கோருபவன் ஒருவனே ஆயினும், அவனது உரிமை பாதுகாக்கப்பட்டேயாக வேண்டும்!

''ஆம்!'' எண்ணிக்கையை வைத்துத் தரப்படுவதில்லை உரிமை! மனிதன் என்ற மரியாதையை வைத்துத் தரப்படுவதே உரிமை! உரிமை கேட்கப்படுவதும், மனிதன் என்ற மரியாதையைத் தங்க வைத்துக் கொள்ளத்தான்!''

— இவ்வாறக பாண்டியன் எழுதியுள்ளார். இது ஒன்றே தமிழக மக்கள் செல்வா மீதுவைத்துள்ள பாசத்தை காட்டிடவில்லையா?

இப்படி நண்பா, நம் தமிழ் நாட்டுச் சுற்றுலா நாம் எண்ணிய அளவுக்கு சுவையும் பயனும் உள்ளதாக அமைந்து விட்டது! நம் சுற்றுலா வெற்றி பெறுதற்கு காலாக இருந்த இரண்டு நண்பர்களுக்கு ஈழத் தமிழினம் என்றும் கடமைப்பட்டுள்ளது; ஒருவர் உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. ஜனர்த்தனம் அவர்கள்; மற்றவர் முரசொலி அடியார் அவர்கள்; இந்த இரண்டு தமிழ் உள்ளங்களும், தந்தை செல்வாவின் தமிழகப் பயணம் வெற்றியடைய எறும்புபோல உழைத்தன; நாம் அங்கு தங்கியிருந்த நாட்களில் தூக்கமின்றி பாடுபட்டார்கள் — அதிலும் குறிப்பாக நண்பர் ஜனர்த்தனம் இடைவிடாது ஆற்றிய பணி நம் வாழ்நாளில் என்றும் மறக்கமுடியாத பெரும் பணியாகும்! ஈழத் தமிழினத்தின் இலட்சியம் கைகூடுமானல் இந்த நண்பர்களுக்கும் நிச்சயம் அதில் பங்குண்டு!

நண்பா, ஈழத் தமிழினத்துக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களையும், அதிலிருந்து மீட்சி பெற நாம் விடுக்கும் கோரிக்கையிலுள்ள நியாயங்களையும் அகில உலகும் அறியச் செய்ய வேண்டும் என்பதே நமது கட்சியின் முடிவாகும். அதில் முதற் கட்டமாகத்தான் தமிழ் நாடு சென்று திரும்பினேம் — முதற்கட்டம் வெற்றியளித்துள்ளது! அடுத்த கட்டத்துக்கு இனி நம்மைத் தயார் படுத்துவோம் —

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

# எண்ணம்

## சூடான் தரும் பாடம்!

இரண்டு தனித்தனி மொழிகளைப் பேசும், இருவேறுபட்ட கலாசாரங்களையும், தனித்தனிப் பிரதேசங்களையும் கொண்ட இரண்டு இனங்கள் வாழும் இந்நாட்டிற்கு புதியதோர் அரசியல் திட்டம் விரைவில் வரவிருக்கிறது.

வரவிருக்கும் புதிய அரசியல் திட்டம் ஒற்றையாட்சி அரசியலமைப்பாக— ... ... ... ... ...

(தணிக்கை)

... ... ... அதை தமிழ் பேசும் மக்கள் கடுமையாக எதிர்த்துவருகின்றனர்;

இலங்கை, இனப் பிரச்சினை காரணமாக இரண்டாகப் பிளவுபட்டுவிடக் கூடாதென்பதில் இப்போது பலரும் அக்கறை காட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

'யாழ் தேஷ்' என்றொரு கோரிக்கையை தமிழ் மக்கள் யாருமே முன் வைக்காதபோது — தமிழினத்தை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்று பிரதேச ரீதியாகப் பிரித்து பிளவுபடுத்தும் சதி நோக்குடன் 'யாழ் தேஷ்' கோரிக்கையை தாமே உருவாக்கி, அதை எதிர்த்து நாள்தவறாமல் பிரசாரம் செய்து வருகின்றன இந்நாட்டுத் தினசரிகள்—குறிப்பாக ஏரிக்கரை ஏடுகள்;

பிரிவினையை எதிர்த்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரசாரம் நடத்துவதற்கும் ஆளுங்கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன முடிவு செய்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன;

நாமும் இது நாள் வரை பிரிவினைக் கொள்கையை எதிர்த்தே வந்திருக்கிறோம். நாட்டுப் பிரிவினையல்ல நாம் வேண்டுவது—அதிகாரப் பிரிவினையே என்று விளக்கி வந்திருக்கிறோம்.

ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாட்டில் — சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்துக்கு அடிமையாகாமல், சமத்துவமாக வாழ்வதற்கும், அதே சமயத்தில் நாடு பிளவுபடாமல் தவிர்ப்பதற்கும் ஒரே வழி ஒவ்வொரு இனத்துக்கும் இணைப்பாட்சியின் கீழ் சுயநிர்ணய உரிமை வழங்குவதே என்று எடுத்துரைத்து வந்திருக்கிறோம்.

இப்போது வட ஆபிரிக்காவிலுள்ள அரபு நாடாகிய 'சூடான்', பிரிவினை ஆபத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்காக சமஷ்டி அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டு இனப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பதை ஏனைய நாடுகளுக்கு பிரத்தியட்சமாக எடுத்துக் காட்டியிருக்கிறது!

சூடான்—இலங்கையைப் போன்றே இரண்டு தனித் தனி இனங்கள் வாழும் ஒரு நாடு!

சூடானில் பெரும்பான்மை மக்களான அரபுகள் வட பகுதியில் வாழ்கிறார்கள். சிறுபான்மையினரான நீக்ரோக்கள், சூடானின் தென்பகுதியில் வாழுகிறார்கள்; இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் எப்படி பெரும்பான்மையோராக வாழுகிறார்களோ, அப்படியே தெற்கு சூடானில் நீக்ரோக்கள் பெரும்பான்மையோராக வாழ்ந்துவருகின்றனர்;

இரு இனத்தவர்களும், பேசும் மொழியாலும் மற்றும் கலை கலாசாரம், பாரம்பரியத்தாலும் முற்றிலும் மாறுபட்டவர்களாகவும் வேறுபட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

பதினேழு ஆண்டுகளுக்கு முன் வெள்ளையர்கள் சூடானுக்கு சுதந்திரம் வழங்கிய நேரத்தில் — இலங்கையில் செய்தது போலவே—சூடானிலும் ஒற்றையாட்சி அரசியலமைப்பின்கீழ் பெரும்பான்மை இனத்தினரான அரபுகள் கையில் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு வெளியேறினர்.

அதன் பயன் ............? சிறுபான்மை மக்களான நீக்ரோக்கள் அஞ்சியதுபோலவே, அவர்களது மொழி உரிமை பெரும்பான்மையோரால் மறுக்கப்பட்டது; பிரதேச, கலை கலாசார கல்வி உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டன. பெரும்பான்மை இனம் ஆளும் இனமாகவும், சிறுபான்மை இனம் ஆளப்படும் இனமாகவும் அவதியுறும் நிலை ஏற்பட்டது அங்கு!

இதனால் தென் சூடான் தனியே பிரிந்து 'அசானியா' எனும் பெயருடன் தனிநாடு அமைத்திட வேண்டும் என்னும் குறிக்கோளை வைத்து நீக்ரோக்கள் அங்கு போராட்டம் தொடங்கினர். 1955ம் ஆண்டு தென் சூடானுக்கு சுதந்திரம் கோரி வெடித்த விடுதலைப் போர் சூடானின் பெரும்பான்மை இன ஆட்சியால் கடுமையாக நசுக்கப்பட்ட போதும், விடுதலைப் போராட்டம் அத்துடன் அழிந்துவிடவில்லை.

கடந்த 16 ஆண்டுகள் தொடர்ச்சியாக நடைபெற்ற தென் சூடானியர்களின் போராட்டத்தின் பயனாக, சூடானின் ஆட்சி இப்போது இறங்கி வந்திருக்கிறது.

இந்த விடுதலைப் போரில் சிறுபான்மை மக்கள் அனுபவித்த தொல்லைகளும் துன்பங்களும் ஏராளம் ஏராளம்; செய்த தியாகங்கள் ஏராளம் ஏராளம்; அகதிகளாக அடித்து விரட்டப்பட்டனர்; கொடுமைப்படுத்தப்பட்டனர்; காடுகளில் மறைந்து வாழ்ந்தனர்; அவர்கள் கண்டது கண்ணீரும், செந்நீரும்தான். தங்கள் சுயமரியாதைக்காக — தன்மானத்திற்காக — இன விடுதலைக்காக — அவர்கள் எந்த விலையையும் கொடுக்கத் தயாராக இருந்தனர் —

தென் சூடான் மக்களின் தியாக வேள்வி வீண்போகவில்லை — விடுதலைப் போர் அவமாகவில்லை —

போராட்டத்தின் பயனாக — தென் சூடான் மக்களுடன் சூடான் அரசு இப்போது இறங்கிவந்து இணக்கம் கண்டுள்ளதன் மூலம், சூடான் பிளவுபடுவது தவிர்க்கப்பட்டுள்ள அதே நேரத்தில் தென் சூடான் மக்களின் வாழ்வும் தனித்துவமும் பாதுகாக்கப் பட்டுள்ளது.

அரபு மட்டும்தான் சூடானின் தேசிய மொழி; இஸ்லாம் மட்டுமே சூடானின் தேசிய மதம் என்னும் இனவெறிக்கொள்கையை பெரும்பான்மை மக்களான அரபு முஸ்லிம்கள் கைவிட்டுள்ளனர்; இதற்குப் பதிலாக 'தனி நாடு' கோரிக்கையை சிறுபான்மையினர் கைவிட்டுள்ளனர்.

சூடானில் தோன்றிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அரசியலமைப்பின் மூலமே இப்போது இறுதியான தீர்வுகாணப் பட்டுள்ளது. சூடான் நாடு இரண்டாகப் பிளவுபடும் மாபெரும் ஆபத்திலிருந்து அந்நாட்டை சமஷ்டி அரசியலமைப்பே காப்பாற்றியிருக்கிறது!

சூடானில் உள்ள பெரும்பான்மை இனத்தினரான அரபு முஸ்லிம்களின் நல்லெண்ணம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை காரணமாகவே நாடு பிளவுபடுவது அங்கு தவிர்க்கப் பட்டிருக்கிறது!

வட சூடான் அரபுகளுக்கும், தென் சூடான் கிறிஸ்தவ நீக்ரோக்களுக்கும் ஏற்பட்டுள்ள இணக்கத்தின் பெறுபேறாக — மூன்று மாகாணங்களைக் கொண்ட நீக்ரோக்கள் வாழும் தென்பகுதி முழுவதும் சுயாட்சி படைத்த சமஷ்டிப்பிரதேசமாகப் பிரகடனம் செய்யப் பட்டுள்ளது. தென் சூடான் இனி, தனி சட்ட சபை, அமைச்சரவையுடன் மாநில சுயாட்சி கொண்டதாக இயங்கும்! இராணுவம், பொலிஸ் போன்ற சேவைகளுக்கு தென் சூடானியர் விகிதாசாரப்படி சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். தென் சூடானின் எல்லைப்பாதுகாப்புக் கூட தென் சூடானியரிடமே கையளிக்கப்பட்டுள்ளது!

இவ்வாறாக சூடான் தனது இனப்பிரச்சினையை சமஷ்டி அரசமைப்பு மூலம் கௌரவமாக தீர்த்துக் கொண்டிருக்கிறது—சூடானின் பெரும்பான்மை இனத்தினரின் தாராளப் போக்கினால் நாட்டின் ஒருமைப்பாடும் கட்டிக்காக்கப்பட்டிருக்கிறது!

இருண்ட கண்டம் என்று ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட ஆபிரிக்க நாடொன்றே ஒளி மிகுந்த சமஷ்டி வழியைக் கடைப்பிடித்து சிறுபான்மை பிரச்சினையைத்தீர்த்து விட்டது!

சூடான் காட்டிய முன்மாதிரியை இலங்கை அரசும் இங்குள்ள பெரும்பான்மை இனமும் பின்பற்றுமானால், இந்நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் என்றென்றும் அசையாது கட்டிக்காக்கப்படும். பிரிவினைப் பிரசாரமும் பொடிப்பொடியாகும்!

சூடானின் பெரும்பான்மை இனத்தினர் காட்டிய தாராளப் போக்கினை இந்நாட்டுப் பெரும்பான்மையினரும் பின்பற்றுவார்களா...... அல்லது...... காலம் பதில் சொல்லும்!!

# இந்து இளைஞர் வெளிநடப்பு

## இலங்கை இளைஞர் பேரவையில் சிங்களத் திணிப்பு!

இலங்கை இளைஞர் பேரவையினர் நடத்திய கருத்தரங்கில் 'சிங்களம் மட்டும்' திணிக்கப்படுவதை எதிர்த்து இந்து இளைஞர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

இலங்கை இளைஞர் பேரவையில் இந்நாட்டு இளைஞர் இயக்கங்கள் அனைத்தும் உறுப்புரிமை பெற்றுள்ளன. கிறிஸ்தவ, பௌத்த, முஸ்லிம் இந்து வாலிபர் சங்கங்கள், ஜேசீஸ், சாரணர்கள், போன்ற ஏராளமான இளைஞர் இயக்கங்கள் இதில் உறுப்புரிமை பெற்றுள்ளன. அகில இலங்கைத் தமிழ் பௌத்த காங்கிரசின் இளைஞர் அவையும் உறுப்புரிமை பெற்றுள்ளது. இலங்கை இளைஞர் பேரவையின் ஸ்தாபக உறுப்புரிமைச் சங்கங்களுள் கொழும்பு அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கமும் ஒன்று.

இந்து வாலிபர் சங்கப் பிரதிநிதிகள் மூவர், 'குடும்ப நலமும் இளைஞரும்' என்ற தலைப்பில் அமைந்த மூன்று நாட் கருத்தரங்கில் கலந்து கொள்ள அழைப்பின் மீது சென்றிருந்தனர். அக்கருத்தரங்கில் மட்டும் நடத்தப்படுவதை அறிந்து அவர்கள் தங்கள் நிலையைக் கூட்டத்தினர்க்கு விளக்கினர். — சிங்களத்தில் நடப்பதை ஏற்றுக்கொள்ளாத இந்து இளைஞர்கள் சமகால மொழிபெயர்ப்புக் கொடுக்க வேண்டும் என வாதிட்டனர்.

சமகால மொழி பெயர்ப்புத் தரமுடியாது எனக் கருத்தரங்குத் தலைவர் அறிவித்ததைத் தொடர்ந்து அவர்கள் வெளிநடப்புச் செய்வதாகக் கூறி வெளியேறினர்.

தனங்களப்பு இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. வே. இ. ஜெகராசா இந் நிகழ்ச்சி பற்றிப் பின்வருமாறு கூறினார்.

'சிங்கள இளைஞர்கள் அனைவரும் கருத்தரங்குத் தலைவரின் முடிவை ஏற்றுக் கொண்டனர் எனக் கூறமுடியாது: நான் சந்தித்த பல சிங்கள இளைஞர்கள், கிராமப்புறங்களில் இருந்து வந்தவர்கள், தமிழிலும் சிங்களத்திலும் சமகால மொழி பெயர்ப்பு இருப்பதை விரும்பினர். எமது கருத்துக்களை அவர்கள் அறிய விரும்பினர்

'தமிழ் பௌத்தகாங்கிரஸ் இளைஞர்களும் முஸ்லிம் வாலிபர் சங்கப் பிரதிநிதிகளும் எமது கருத்தை ஆதரித்துப் பேசினார்கள். எனினும் (தணிக்கை) தலைவர் நியாயமான சரத்துக்களுக்கு இடம் கொடுக்கவில்லை. எனவே நாம் வெளிநடப்புச் செய்யவேண்டியதாயிற்று!

'எமது நடவடிக்கை இந்த நாட்டில் உள்ள இந்து இளைஞர் சங்கங்களின் கருத்தை யே பிரதிபலிப்பதாக நாம் நம்புகிறோம்.

'இலங்கை இந்து இளைஞர் பேரவைத் தலைமைச் செயலாளர், திரு. க. சச்சிதானந்தன், கல்கிசை இந்து இளைஞர் சங்கத்தைச் சார்ந்த திரு. சின்னையா கதிர்காமநாதன் ஆகியோரும் இந் நிகழ்ச்சியில் எனக்கு அனுசரணையாகவும் உதவியாகவும் இருந்தனர்.'

## வர்த்தகத்துக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

5. 2. தென்னிந்தியர் படையெடுப்பு. வர்த்தகத்துகாக் மூர் இலங்கைக்கு வருதல். 13ம் நூற்றுண்டில் யாழ்ப்பாணத்தில் ஓர் இராசதானியை அமைத்தல். 1837ம் ஆண்டுக்குப் பிறகு தென்னிந்தியர்கள் தொழிலாளர்களாக இங்கு வந்தனர். வேறு சிலர் இங்குவந்து குடியேறினர்.

மேற்கூறப்பட்டவாறு ஆசிரியருக்கு கற்பிக்க அனுபம் பாடத்திட்டத்தில் எழுதப்பட்டுள்து.

## கருணாநிதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர் கோவை மகேசன் ஆகியோர் சென்றிருந்தனர்.

தந்தை செல்வா அவர்கள் மெல்ல அடியெடுத்து கலைஞரின் அறையினுள்ளே நுழைந்ததும், கலைஞர் இருக்கை விட்டெழுந்து ஓடோடிச் சென்று செல்வாவை வாஞ்சையுடன் அரவணைத்து அழைத்து வந்து தமக்கு அருகே உட்கார வைத்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது; தந்தையும் மகனும் போல் செல்வாவும், கருணாநிதியும் அருகருகே காணப்பட்டனர்;

தந்தை செல்வாவும், பொதுச் செயலாளர் அமிர்தலிங்கமும் ஈழத்தமிழினத்தின் இன்றைய நெருக்கடியான அரசியல் நிலையையும் வரவிருக்கும் புதிய அரசியல் சட்டத்தினால் தமிழ் மக்களுக்கு ஏற்படவிருக்கும்பேராபத்துக்களையும் முதல்வருக்கு எடுத்து விளக்கினர். தமிழரசுத் தந்தையின் கருத்துக்களை கலைஞர் கருணாநிதி மிகுந்த கவனத்துடன் செவிமடுத்தார். ஈழத்தமிழர்களின் மீதும், அவர்களது நியாய பூர்வமான கோரிக்கைகள் மீதும் தி. மு. கழகத்துக்கு எப்போதுமே ஆழ்ந்த அக்கறையும் ஆதரவும் உண்டு என்று ஒரு கட்டத்தில் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

சுமார் 40 நிமிடங்கள் கலைஞர்—செல்வா பேச்சுவார்த்தை இடம் பெற்றது. பேச்சுவார்த்தை முடிவடைந்ததும் தந்தை செல்வாவைக் கரங்கூப்பி வணங்கி வழியனுப்பி வைத்தார் கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி.

## தமிழ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதை புரியாத மண்டைகள் இனியாவது புரிந்து கொள்ளட்டும்.''

— இவ்வாறு மட்டு நகர் முதல்வர் திரு. செ. இராசதுரை சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்:

## ஆபீஸ் பையன் கேள்வி!

'சண்டையிட்டுக் கொண்டிருந்த நாட்களை மறப்போம் — சேர்ந்திருந்த காலத்தை நினைப்போம்'

—வி. பொன்னம்பலம்
(தினகரன் 12. 3. 72)

ஏன் சார், சீதனப் பணத்துக்காக மனைவியுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்த நாட்களை மறக்கும்படி கூறுகிறாரோ வி. பி. என்று கேட்கிறான் நமது ஆபீஸ் பையன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் மஜீத்! மூடு வாயை!

## கிழக்கு மாகாணத்துக்காகப் பேச உமக்கு என்ன யோக்கியதை?

### சமஷ்டிக்கும் தனி நாட்டுக்கும் வேறுபாடுபுரியாமல் ஏன் உளறுகிறீர்?

1966ம் ஆண்டு தமிழ்மொழி விசேட மசோதாவின் போது பாராளுமன்றத்திற்குச் செல்லாது ஒழித்திருந்த உதவி மந்திரி அப்துல் மஜீத் அவர்களே கிழக்கிலங்கைத் தமிழ் பேசும் மக்கள் பற்றிப் பேசுவதற்குத் தாங்கள் யார்? உழுத்துப்போன உதவி மந்திரிப் பதவியைப் பாதுகாக்க வேறு வழியில்லையா?

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி தமிழ் அரசுக் கட்சியினர் எடுத்த மாபெரும் முயற்சியின் பலனாக 1666ம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்மொழி விசேட மசோத பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது பாராளுமன்றத்திற்குச் சமூகமளியாது பதுங்கியிருந்த தங்களுக்கு கிழக்கிலங்கைத் தமிழ்பேசும் மக்கள் நலன் பற்றிப்பேசுவதற்கு என்ன அருகதை. கிழக்கிலங்கையில் வாழும் 10 லட்சம் தமிழ் மக்களுக்கும் தாங்கள் என்ன ஏகப் பிரதிநிதியா? தமிழ் இனத்தின் பகைவர்களின் காலில் விழுந்து பெற்ற உழுத்துப் போன உதவி மந்திரிப் பதவியைப் பாதுகாக்க வேறு வழியே கிடையாதா? சோசலிசம் என்று நாநோகப் பேசித் திரியும் தங்களின் சொரணையற்ற கருத்தை வெளியிட ஏகாதிபத்திய வாதிகளின் ஏரிக்கரைப் பத்திரிகையா கைக்கூலி?

கடந்த 5-2-72 தினகரனில் ஏதோ அறிவுள்ளவர்போல எமது தமிழ் அரசுத் தலைவர்களின் கொள்கையை எதிர்த்து ஏதோ அப்பட்டமான பொய்களை அவிழ்த்து விட்டிருந்தீர்கள். எமது தலைவர்கள் தனி நாடுகேட்பதாகக் கூறியிருந்தீர்கள் தான் உங்களுக்குத்திட்ட வட்டமாகக் கோணல்பார்வையின்றி நேர்மையான பார்வையில் கூறுகின்றேன்: எமது தலைவர்கள் கேட்பது தனி நாடல்ல. சமத்துவம் மிக்க சமஷ்டி நாடு.

சோஸலிசம் சோஸலிசம் என்று பேசி எஜமானராக, முதலாளியாக, தொழிலாளி அதிபராக உயர முயற்சி பண்ணும் தந்திரம் மிக்க தங்களுக்கு தனிநாடு அரசியலுக்கும் சமஷ்டி அரசியலுக்கும் இடையே உள்ள பாகுபாடு புரியாதா?

தமிழ் இனத்தை அரசினரிடம் அடிமைப்படுத்தி விட்டு அரசினர் உதவியுடன் நாம் முதலாளியாக மாறிவிடுவோம் என எண்ணுவது தகுமா? நடைபெறுமா? காலாகாலமாகத் தமிழ் பேசும் இனத்திற்குப்பாடுபட்டுப்பலன் பல பெற்ற தமிழ் தலைவர்கள் இதனை விட்டாலவைப்பார்கள். இது மட்டுமல்ல இன்னும் எத்தனையோ தந்திரங்கள் தாங்கள் கையாளுகின்றீர்கள். எல்லாம் மக்களுக்குப் புரியும். சும்மா இருப்பதுதான் தங்களுக்கு நல்லது இன்றேல் தங்கள் முகத்திரை கிழிந்துவிடும்.

1956ம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா தேசியப் புரட்சியையும் உணர்ச்சியையும் ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். நான் கூறுகிறேன். திரு. பண்டார நாயக்கா 1956ல் ஏற்படுத்தியது தேசியப் புரட்சியுமல்ல தேசிய உணர்ச்சியுமல்ல தனிச்சிங்கள உணர்ச்சி;

1956ம் ஆண்டுப் பண்டார நாயக்காவின் திட்டம் தங்களுக்கு எப்படி ஐயா தெரியும், புரியும், காரணம் அந்த வேளை தாங்கள் எம் தந்தை செல்வா அவர்களை வணங்கிய நேரம். அவருக்குச் சிலை எடுக்கப் போவதாகக் கூறிய காலம்: மக்களை ஏமாற்றுவதில் வல்லவர் தாங்கள் என்பதை நிரூபிக்க இப்படியான அப்பட்டமான பொய்களையா அவிழ்த்து விடுவது. ஓகோ, தினபதியாரின் நண்பரல்லவா தாங்கள் அதனால் தான் பொய்களை அவிழ்த்து விடுவதில் இருவரும் ஒரு தரமாய் விளங்குகின்றீர்கள் போலும்;

**ரி. ராசா மூதூர்**

கட்சி இன்றிக் கொள்கையின்றி நடுத்தெருவில் நின்று 1960ம் ஆண்டு தேர்தலில் இறங்கித் தோல்வி கண்ட தாங்கள் மூதூர் தொகுதி வாழ் தமிழ் பேசும் மக்களால் உதைத்துத் தள்ளப்பட்ட தாங்கள் — தட்டிக்கழிக்கப்பட்ட தாங்கள் — ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்னும் இலங்கை சிங்கள மகா ஜனக் கட்சியினரின் காலில் வீழ்ந்து 'ரிக்கற்' பெற்று, அக்கட்சியின் அபேட்சகராய் 1960ம் ஆண்டு இடைத் தேர்தலில் இறங்கி நாட்டின் பலபாகங்களில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்டடு மூதூர் தொகுதியில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் உதவியால் பாராளுமன்றத்தைப் பார்த்ததை மக்களுக்குத் தெரியாமலா போய்விட்டது: அதனை இலங்கை தமிழ் மக்கள் இன்றும் மறந்துவிடவில்லை; இந்த வகையில் தங்கள் உதவி சிங்கள இனத்திற்கு வேண்டுமே தவிர எம் இனத்திற்குக் கிஞ்சித்தும் தேவையில்லை; அவர்கள் நலன் பற்றித் தாங்கள் சிறிதும் பேசவேண்டிய அவசியமோ, அக்கறையோ வேண்டியதில்லை;

உள்ள பதவியாம் உளுத்துப்போன உதவி மந்திரிப் பதவி—அதனை மட்டும் விட்டு விடாமல் இறுக்கிப் பிடித்துக் கொள்ளுங்கள். அதை விட்டால் வேறு வழி இல்லை தாங்கள் வாழ்வதற்கு!

கிழக்கிலங்கைத் தமிழர் நலன் பேணும் புதுத் தமிழ் அபிமானியாரே! கிழக்கிலங்கையிலேயே உள்ள தங்கள் மூதூர் தொகுதியில் உள்ள ஈச்சிலம்பத்தை கிராமச் சபைப் பகுதியை தனிசிங்கள டி. ஆர். ஓ. பிரிவான சேருவிலையுடன் சேர்த்து அங்கு வாழும் 3,000 தமிழ் பேசும் மக்களுக்கும் இன்னல் ஏற்படுத்தியதை எதிர்த்து தமிழரசுத் தந்தை செல்வா அவர்களின் உதவியுடன் மூதூர் மாதா ஈன்றெடுத்த தங்கத் தமிழ் மகன் கடமைக் கடல் திரு. அ. தங்கத்துரை அவர்கள் அரசினரிடம் அதாவது உள் நாட்டு, உள்ளூராட்சி மந்திரியுடன் போராடிய போது அந்த மந்திரியிடம் மறைவாகச் சென்று ஐயா, அந்தப் பகுதியில் 3,000 தமிழ் வாக்குகள் உண்டு. அந்தப் பகுதியை மூதூர் டி. ஆர். ஓ. பிரிவுடன் சேர்ப்பதால், நாம் புதிதாகப் பிரிக்கப்போகும் தேர்தல் தொகுதிப்பிரிவின் போது அந்தவாக்குகள் மூதூர் தொகுதியுடன் சேர்ந்து விடும் அதனால் மூதூர் தொகுதியில் தமிழர் தொகை கூடுதலாக இருக்கும் அதன் நிமித்தம் அங்கு தமிழர் ஒருவர் தான் எம். பி. யாக வர முடியும் அப்படியானால் நான் எம். பி. யாக வர முடியாது. நான் எம். பியாக வரா விட்டால் உங்களுக்கு ஆமாசாமி போடும் ஒரு ஸ்தானம் குறைந்து விடும் ஆனகாரணத்தால் அப்பகுதி சேருவில் டி. ஆர். ஓ. பிரிவில் சேர்ந்து இருப்பது தான் நல்லது அது மட்டுமல்ல

(8ம் பக்கம் பார்க்க)

## வஞ்சிப் பத்தர்

தமிழரசுக் கட்சியின் தொண்டனாகப் பல காலங்கள் நடித்து வளர்ந்து (எழுத்தைத் தவிர) பல துறைகளிலும் முன்னேறிய ஒரு காதல் எழுத்தாளர் இன்று என்ன பேசுகிறார் என்பதைக் கவனியுங்கள்.

"இத்தனை நாட்களும் நான் தவறான பாதையில் வழிநடாத்தப்பட்டு விட்டேன்! இப்போது தான் சோசலிசத்தை நன்கு படித்துப் புரிந்து கொண்டேன்."

இந்தக் காதல் எழுத்தாளர் கம்யூனிசதோழர்களின் காதுகளிலே விழவேண்டும் என்று இப்படிக் கூறியும் இவருக்கு வியாபாரத்தில் இதுவரை எதுவித இலாபமும் கிடைக்கவில்லை. ஐ. ஆர். சி. என்று பேர் பெற்ற ஒருவன் தனது ஊரிலுள்ள ஒரு கனவான் வீட்டிற்குப் பொழுது போக்குவதற்கென்று கதைக்கப்போக அந்தக் கனவான் முற்றத்தில் நின்றபடியே மலர்ந்த முகத்துடன் "ஓடும் புளியம் பழமும் போல் இரண்டொரு வார்த்தை கூறி அப்ப போட்டு வா' என்று அனுப்பி விட்டது போல் கம்யூனிச தோழர்கள் இவருடன் நடந்து கொள்ளுகிறார்களாம்.

கம்யூனிஸ்ட் கட்சியில் சேருவதற்கு இவர் விண்ணப்பித்த விண்ணப்பம் பழுப்பேறி விட்டதாம். இவர் ஏன் எம்முடன் ஒட்டப்பார்க்கிறார் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்ட தோழர்கள் 'தகைமைகாண் படலத்தை வேண்டா வெறுப்புடன் ஆறுதலாகத் தட்டிக்கொண்டிருக்கிறார்களாம். கம்யூனிச தோழர்களைப் பார்க்கிலும் இவருக்கு இப்போது அடிக்கடி உணர்ச்சி வர ஆவேசமாகப் பேசுவதில் அக்கறை காட்டுகிறாராம். எனவே புரட்சி, மடமை என்றெல்லாம் 'அவுட்டுகள்' விடுகிறார்; அது மேலே கிளம்பி வெடிக்காது 'மக்கர்' அடித்து இவரது புத்திலைச் சுட்டிக்காட்டுகிறது:

"இத்தனை நாட்களும் தவறான பாதையில் வழி நடாத்தப்பட்டு விட்டேன்" என்று அங்கலாய்க்கும் காதல் எழுத்தாளர் போன புதுப்பாதைகள் பல என்பதைப் பலர் அறிவர். 'தவறான பாதை' என்று ஒருமையில் அவர் சொல்வதை நாம் விளங்கி அவரது மனவருத்தத்திற்கு மருந்து செய்ய மேலும் சற்று அவர் கூச்சமின்றி விளக்க வேண்டும்;

**இலக்கிய உலகு**

**"வேதாளம்"**

இவர் பெற்ற சோசலிச அறிவு சோசலிச சித்தாந்த நூல்களில் இல்லை: தனது வாழ்க்கை அனுபவத்திலே பிறந்த ஒருவகை இன்பத்தை — சித்தாந்தத்தை — அவர் சோசலிசம் என்று கொண்டாடுகிறாராம்.

பேரறிஞர் அண்ணாவின் பக்தனாக அவர் திரிந்தாரே இப்போது ஏதோ திரிகிறாரே. அண்ணாவின் தமிழைப் படித்து எழுத்தாளராகி இன்று அண்ணாவின் பெயர் இந்நாட்டிலே ஒலிப்பதைத் தடைசெய்வதற்குக் கோள் சொல்லித் திரியும் வயிறு கழுவிகளுடன் இவர் சேரத் துடிக்கிறாரே என்று கேட்காதீர்கள். அண்ணாவின் பெயரை வைத்து சில வசதிகளை ஏற்படுத்தி முன்னேறத் துடித்தார் அவ்வளவு தான்! மானம்மிக்க தமிழர்களின் அழியாத இதய ஜோதி அண்ணாவின் பக்தரல்லர் இவர்; இவர் ஒரு வஞ்சிப்பத்தர்!

## வட்டுக்கோட்டைத் தியாகராசா முகத்தில் வாலிபர்கள் கரிபூசினர்!

கடந்த திங்களன்று (28-2-72) ஆராலி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் "நான் ஏன் அரசியல் திட்டத்தை ஆதரிக்கின்றேன்!" என்ற விடயம் பற்றிய கருத்தரங்கத்தை வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் ஆ. தியாகராசா ஒழுங்கு செய்திருந்தார். தனது ஆதரவாளர்களுக்கு மட்டும் அழைப்பிதழ் அனுப்பி இருந்தார். இதற்கு வடபகுதி கம்யூனிஸ்ட் தலைவர். திரு. அ. வைத்திலிங்கம் தலைமை தாங்கினார்.

பிற்பகல் 6-30 மணியளவில் கூட்டம் ஆரம்பமாகியது. தியாகராசா பேசத் தொடங்கி 5 நிமிடத்தின்பின் "நீர் ஏன் அரசாங்கத்தில்—சேர்ந்தீர்? என்ற கேள்வியை கூட்டத்தின் [illegible] யில் இருந்த ஒருவர் [illegible] கேட்டனர். அதற்கு தியாகராசா பதில் சொல்ல முடியாது. நீ இரு என்று சொன்னவுடன் கூட்டத்தினர் பதில் சொல்லவேண்டும் என்று கூச்சலிட்டனர். சரமாரியாக கேள்விகள் கேட்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் பேசாது மௌனமாக நின்றார். கூச்சலைத்தொடர்ந்து கற்கள் வீசப்பட்டனவாம்;

தலைவர் அ. வைத்திலிங்கம் அமைதியாக இருக்கும் படி கூட்டத்தினரை கேட்டும் கூட்டத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்: அந்த வழியால் வந்த பஸ் சாரதியிடம் சங்கானை காவல் துறையினருக்கு அறிவிக்கும் படி கடிதம் எழுதிக் கொடுத்தார். உடன் மோட்டார் சைக்கிள், ஜீப் வண்டியிலும் வந்த காவல் பகுதி [illegible] செல்லும் படி கூற மோட்டார் வண்டியைச் சுற்றி நின்ற கூட்டத்தினர் கலைந்து சென்றார்கள்: காவல் துறையினரின் பாதுகாப்புடன் வட்டுக்கோட்டை பிரதிநிதி அந்த இடத்தை விட்டுச் சென்றார்.

### தியாகராசா பதுங்கினார்

கடந்தசெவ்வாய்க்கிழமையன்று (29-2-72) வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் கைத்தொழில் உபகரணங்கள் வாங்குவதற்காக ரூபா 10, 5, 3, 1 ஆகிய நிதிசீட்டு விற்பனை மூலம் "பருதியின் மைந்தன்" என்னும் நாடகம் நடைபெற்றது. இதற்கு வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர்; திரு: ஆ. தியாகராசா தலைமை வகிப்பார் என்று நோட்டீஸ் மூலம் அறிவிக்கப்பட்டது;

நோட்டீசை பார்த்தவுடன் தமிழ் துரோகியா தலைமை தாங்குவது என்று வாலிபர்கள் கொதிப்படைந்தார்கள்; கொதிப்படைந்த வாலிபர்கள் முதல் நாள் இரவோடு இரவாக சித்தன் கேணிச்சந்தியிலிருந்து கல்லூரி வரைக்கும் வீதிகள் மதில் எல்லாம் "இனத்துரோகி தியாகராசா," "எட்டப்பன் தியாகராசா," "அரசியல் திட்டத்தில் கையொப்பமிடாதே," "கையெழுத்தே உன் தலையெழுத்து" ஆகியன போன்ற பல எதிர்ப்புச் சுலோகங்கள் கறுப்பு, வெள்ளை மையினால் எழுதிவைத்தார்கள். பாராளுமன்ற உறுப்பினரிடம் பல கேள்விகளை கேட்பதற்கும் வாலியர்கள் தயாரானார்கள்.

இதுபற்றி நாடக அமைப்பாளர்களால் (கல்லூரி ஆசிரியர்கள்) பாராளுமன்ற உறுப்பினருக்கு அறிவிக்கப்பட்டது. வாலிபர்களின் எதிர்ப்பையறிந்த உறுப்பினர் நாடக விழாவுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கபந்துவின் ஆதரவு ஈழத் தமிழர்களுக்கே!

## எமது போராபத்தான நிலையை ரகுமானுக்கு எடுத்து விளக்க வேண்டும்!

வங்காளதேச பிரதமர் ஷேக்முஜிபுர் ரஹ்மான் இலங்கையிலுள்ள வங்காள தேச நட்புறவு சங்கச் செயலாளர் திரு. அமரதாச பெர்னாண்டோவுக்கு, இலங்கை தமிழர் போராட்டத்தினைப்பற்றி கூறியதாக வெளிவந்த செய்தி குறித்து தமிழர் மத்தியில் சிறிது அதிருப்தி ஏற்பட்டுள்ளது; வங்கபந்து முஜிபுர்—சொல்லியதும் சரியோ? என்று வினவ ஆரம்பித்துவிட்டார்கள்.

ஈழத் தமிழர்களின் உரிமைக் குரலான தமிழரசுக் கட்சியே முஜிபுர்ன் போராட்டத்தை முதலில் ஆதரித்த அரசியல் கட்சியாகும். காரணம் உரிமை என்ற உன்னத சக்தியின் பெருமையை அறிந்தவர்கள் உரிமை இழந்த தமிழர்கள். வங்காள தேசத்தை அங்கீகரிக்கவேண்டும் மென்று குரலெழுப்பி வருபவர்களும் தமிழரசுக்கட்சியினரே. இத்தகைய நிலையில் முஜிபுரின் கூற்று தமிழர் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்துவது சகஜமே! ஆனால் சுதந்திர வீரர்முஜிபுர் என்ன கூறினர் என்பதை நாம் கூர்ந்துகவனித்தபிறகே நாம் அதைப் பற்றி ஒரு முடிவுக்கு வரமுடியும்.

"நமது நிலையைப் போன்ற ஒரு நிலை உங்கள் நாட்டில் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை; எம்மை போன்று தமிழர்கள் கரண்டப்பட்டு, நசுக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு, ஒரு நிலை அங்கு உருவாகியிருந்தால் அப்பொழுது அவர்களுடைய கோரிக்கை நியாயமாக இருக்கும்' என்று ஷேக், திரு. அமரதாசாவிடம் கூறியதாக வெளியிடப்பட்டுள்ளது.

ஒன்பது மாதங்கள் பாகிஸ்தான் சிறையிலே காலம் கழித்த ஷேக், வெளியுலக தொடர்பற்றே வாழ்ந்து வந்தார். பாகிஸ்தான் பத்திரிக்கைகளோ இலங்கை செய்திகளுக்கு முதல் இடம் கொடுத்து பிரசுரிப்பதில்லை. வங்க தேச பிரச்சினைகளோ பல. நாட்டை புனர் நிர்மாணம் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பினை ஷேக் பொறுப்பேற்றிருக்கிறார். அழிந்துபோன வங்காள தேசத்தை மீண்டும் தங்க வங்காளம் ஆக்கும் சீரிய பணியில் ஈடுபட்டிருக்கும் முஜிபுருக்கு முழு கவனமும் தன் நாட்டின் மீதே இருக்கிறது; பிறர் பிரச்சினையில் கவனம் செலுத்த அவருக்கு நேரமில்லை.

இலங்கை தமிழர் பிரச்சினையை அவர் கூர்ந்து அவதானிக்காததாலேயே 'நமது நிலையைப் போன்ற ஒரு நிலை உங்கள் நாட்டில் இருப்பதாக நமக்குத்தோன்றவில்லை' என்று சந்தேகம் தொனிக்கும் குரலில் கூறியிருக்கிறார். தமிழர்களின் நிலையைப்பற்றி அவர் திருப்தி அடைந்திருந்தால் தமிழர்களின் போராட்டத்துக்கு காரணமில்லை—அவர்களுக்கு அங்கு சகல உரிமைகளும் உண்டு உறுதியாக கூறியிருப்பார். 'எம்மைப் போன்று கரண்டப்பட்டு நசுக்கப்பட்டு இருந்தால் அப்பொழுது அவர்களின் கோரிக்கை நியாயமாக இருக்கும்' என்று முஜிப், திரு. அமரதாசாவுக்கு தொடர்ந்து கூறியிருக்கிறார்.

(தணிக்கை)

புதிய அரசியல் சட்டத்தின் மூலம் முற்றாக ஒழிக்கப்படுகிறோம்; அரசாங்க சேவை கல்வி, இராணுவ சேவை, வியாபாரம் போன்ற துறைகளில் தமிழர்கள் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டு நசுக்கப்படுகின்றார்கள் என்பதை சில வாரங்களுக்கு முன்பு சுதந்திரன் இதழ் ஒன்று அக்கு வேறாக, ஆணிவேறாக பிரித்து தெளிவுபடுத்தியிருந்தது.

இந்நிலையில் வங்க பந்து நம் நிலையை ஆதரிக்கிறார் என்பதே அர்த்தமாகும். நம் நிலையை உணராத முஜிபுர் உண்மையான நிலையை அறியாது உறுதியான பதிலைக் கூறி தமிழர்களின் உணர்ச்சியை, இழிவு படுத்தகூடாது என்ற நன்நோக்குடன் "நமக்கு தோன்றவில்லை" என்று மிகவனமாக கூறியிருக்கிறார்; எனவே தமிழரசுத் தூதுக் குழுவொன்று வங்க பந்துவையும் சந்திக்க வேண்டும். நம் நிலையை அவருக்கு விளக்கவேண்டும். உரிமை போராட்டவீரரான வங்கம் தந்த தங்கம் முஜிபுர் நிச்சயம் தமிழினத்தின் போராட்டத்திற்கு ஆதரவும் அவர்தம் நிலைக்கு அனுதாபமும் தெரிவிப்பார்.

ஷேக் முஜிபுரை சந்தித்து விட்டு வந்த திரு. அமரதாச பெர்னாண்டோ, ஒரு பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் 'அங்கு சிறுபான்மை இனம் பெரும்பான்மையை அடக்கி, ஒடுக்கி ஆளப்பார்த்தது. சிறுபான்மை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வங்காளிகள் கொதித்தெழுந்தார்கள் உரிமை போராட்டம் நடத்தினார்கள். சோஷலிஸ்டுகள் என்ற முறையில் இவற்றுக்கு ஆதரவு தெரிவித்தோம். ஆனால்யாழ்ப்பாண நிலையோ வேறு. இங்கு எந்த ஏகாதிபத்தியமும் இல்லை. எந்த சோசலிஸ்டும் இந்த போராட்டத்தை ஆதரிக்கப் போவதில்லை. இங்கு யாழ் பிரிந்தால் அதனால் தனித்து இயங்க முடியாது' என்று கூறியுள்ளார்.

திரு. பெர்னாண்டோ ஒன்றை கவனிக்கத் தவறிவிட்டார். நாம் கோருவது சுயாட்சி தமிழரசேயன்றி, பங்களாதேஷ் போன்ற சுதந்திர தமிழரசல்ல. எம்முடைய கொள்கைகளோ சரியானவை. [illegible] கைகளோ நியாயமானவை. [illegible] தமிழ் தொழிற் சங்கங்களும் பல தமிழ் சங்கங்களும் விட்டு கொடுக்கும் உணர்வுடன் சமர்ப்பித்த குறைந்தபட்ச கோரிக்கைகளைகூட ஈயிருக்க இடங்கொடோம் என்ற முறையில் அரசியல் நிர்ணய சபை (தணிக்கை) நிராகரித்து இருக்கின்றது: இந்த நிலையில் தமிழர்கள் உரிமைக்காக போராடுவதைவிட வேறுவழியே இல்லை. சமஷ்டி அமைப்புக்கு உட்பட்ட சுயாட்சியை நாம் மீண்டும் மீண்டும் கோருகிறோம். ... ... ... ... ...

(தணிக்கை)

சுதந்திர வேட்கையற்ற மரக்களாய் நாம் அமைதியுற்றால், வருங்கால சரித்திரம் நம்மை பேடிகள் என்று எள்ளி நகையாடும்; நம்மை அடிமை தளையில் விட்டு சென்ற முன்னோர் என்று எதிர்கால தமிழினம் நம்மை காறிதுப்பும், அடிமை தளையை நாமும் ஒப்போம்; அந்த அவமானத்தை நம் சந்ததிகளுக்கும் விடோம்: இது வரை தமக்குள் சண்டையிட்டுக்கொண்டிருந்த பல தமிழ் கட்சிகள் கூட இந்த தருணத்தில் ஒன்றுபட்டிருப்பதை திரு: அமரதாசா கவனிக்க வேண்டும்.

எந்த இனத்திலும் காட்டிக்கொடுக்கும் எட்டப்பர்கள் பிறக்கத்தான் செய்கிறார்கள்: அதற்கு தமிழினம் விதிவிலக்கல்ல: அந்த சில எட்டப்பர்களை தமிழினத்தின் ஏகப்பிரதிநிதிகளாக கருதுவது மடமையிலும் மடமை மொழிவழித் தொழிற்சங்கங்கள் கூட்டிய கருத்தரங்கின் முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், தமிழர்களின் பயங்கர எதிர்காலத்தை தெளிவாகக் காட்டுகிறது: இங்கு ஏகாதிபத்தியவாதிகள் இல்லை எனச் சொல்கிறார் நண்பர் அமரதாசா; உண்மை. ஒப்புக்கொள்கிறோம். ஆனால்

(தணிக்கை)

சமதர்மம் என்று சொல்லப்படும் சோசலிச அமைப்பில் ஒரு இனத்தை இன்னோர் இனம் புறக்கணிப்பதை எந்த உண்மை சோசலிஸ்ட்டும் ஏற்றுக்கொள்ள மாட்டான்; எளியவன் வலியவனை அடக்கி ஆள்வதும் மட்டும்தான் தவறு? வலியவன் எளியவனை அடக்கி ஒடுக்கி ஆள நினைத்தபோது பெரும்பான்மைக்கு ஆதரவளித்த உண்மை சோசலிஸ்ட்டாகிய திரு: அமரதாச பெரும்பான்மை சிறுபான்மையை ஒடுக்க முயலும்போது ஏன் சிறுபான்மைக்கு ஆதரவளிக்க கூடாது? தானும் சிங்களவர் என்ற முறையில் திரு. அமரதாசா சிங்கள பிரதிநிதிகளின் திட்டங்களுக்கு தலையசைத்தால் அவர் உண்மை சோசலிஸ்ட் அல்ல

அடக்குமுறை எங்கிருந்து வந்தாலும் எந்த முலையில் இருந்து வந்தாலும் அதை ஒடுக்க நினைப்பவனே உண்மை சோசலிஸ்ட். தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தைப் பற்றிய உண்மை செய்திகள் சிங்கள பத்திரிகைகளிலும் சில ஆங்கில பத்திரிகைகளிலும் இருட்டடிப்பு செய்யப்படுவதால் திரு அமரதாசாவுக்கும் சிங்கள சமூகத்தவருக்கும் உண்மை புரியாமலிருக்கலாம். ஆகவே சாத்வீக குணம் கொண்ட நாம் அவரையும் ஒரு பொருட்டாக மதித்து, சந்தித்து நம் நிலையினை விளக்கவேண்டும் தமிழினம் அரசியல் பகடைக்காய்களாக இனியும் வாழ முடியாது.

ராஜ்—வி. செல்வத்துரை

## பாடுபடும் பாட்டாளிகளுக்கு பதினெரு மணிநேர வேலையா?

### பகல் வேஷம்போடும் பணக்காரர்கள் பண்பாடே அற்றவர்களா?

### சமதர்மம் பேசும் சண்டாளர்களே!

### ஏன் இந்த அநீதி! அக்கிரமம்!! அநியாயம்!!!

ஈழத்தின் வளர்ச்சிக்கே— ஈழத்தின் உயர்ச்சிக்கே-ஈழம் வாழ் மக்களின் மகிழ்ச்சிக்கே— ஈழவள நாட்டின் பெருமைக்கே சின்னமாக, ஏன்? சிகரமாக விளங்குபவர்கள் பாட்டாளிப் பெருங்குடிமக்கள்! அதிலும் குறிப்பாக, மலையகப் பாட்டாளிகளோ உழைப்பொன்றையே தம் வாழ்நாளின் உயிர்நாடியாகக் கொண்டுள்ளனர்.

'உயிர்' என்ற ஒன்று தம் உடலில் முடங்கிக் கிடக்கும் வரை அவர்களின் பேச்சு, மூச்சு எல்லாம் 'உழைப்பு' என்ற உயர்ந்த பண்பில் தான்; உழைத்து, உழைத்து உருக்குலைந்துபோய்— மாடாய் உழைத்து, ஓடாய், உடைந்து போனவர்கள் தான் - இப்பாட்டாளிப் பெருங்குடி மக்கள். அவர்கள் [illegible] உழைத்து [illegible] கடைத்ததுதான்!

மலையகத்திலே 'தொழிற் சங்கங்கள்' என்ற 'கோட்டைகள்' பலபரந்து - விரிந்து காணப்படுகின்றன. அவற்றின் சேவைகளுக்கு நற்சான்றுகள் பகர்ந்து-புகழ் ஏணியில் அவர்களை உயரத் தூக்கிக் கவிபாடும் எண்ணற்ற எழுத்தாளர்கள் - ஏனோ? தொழிற்சங்கங்களுக்கே - அவற்றின் உயிர்மூச்சுக்கே அச்சாணியாக இருக்கும் தொழிலாளரின் துன்பகரமான வாழ்க்கையைப் பற்றி எழுத தமது எழுத்தாணியைப் பாவிப்பதில்லை!

மலையகத்திலே......

மலையகத்திலே இப்போது எட்டுமணி நேர வேலைக்குப் பதிலாக "பதினெரு" மணி நேர வேலையே வாங்கப்படுகின்றது! பாடுபடும் பாட்டாளிகளின் மனம் பரிதவிக்க — உழைப்பாளர்களின் உள்ளம் கொதித்தெழும்ப- அவர்களின் உடலே இல்லை!

'எஸ், ஆர், ராஜா'

உயிரை வீணே வாட்டி வதைக்கின்றனர் இந்தப் பணக்காரப் பத்தாம் பசலிகள்!

காலையில் ஆறு மணிக்குப் பிரட்டுக்குப்போய், துண்டு வாங்கிக்கொண்டு (காலைச் சாப்பாடே இல்லாமல்) ஓடுகிறார்கள், மலையை

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இலங்கை தமிழ்நாட்டு மக்களுக்கு உதவிட இந்திரா அம்மையார் முன்வர வேண்டும்'

## ஈழத் தமிழினத்தின் போராட்டத்துக்கு உறுதுணையாக நாம் இருப்போம்!

## சிலம்புச் செல்வர் ம. பொ. சி. சிங்கநாதம்!



''இலங்கைத் தமிழர் தலைவர் செல்வநாயகத்தைப் பாராட்ட இன்று நடைபெறும் இக்கூட்டம் மிகவும் முக்கியமும் வரலாற்றுச் சிறப்பும் மிகுந்தது ஆகும்.

''இலங்கைத் தமிழ் நாட்டின் 30 இலட்சம் மக்களது தலைவிதியை நிர்ணயிக்கும் விடுதலைக் கட்டத்தின் முதல் கூட்டத் தொடக்க விழாவாகவே இந்த விழாவை நான் கருதுகிறேன்.

''இலங்கைத் தமிழ் நாட்டின் தமிழின மக்களது உரிமைக்குரலை ஆதரித்துப் பேசுவது சரியா? தவறா? ஒரு அயல்நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதா? அது முறையாகுமா என்னும் ஐயப்பாட்டை சிலர் எழுப்புகின்றனர்.

''அரசியலால் இலங்கை அயல்நாடு ஆகலாம். ஆனால் அங்கு வாழும் தமிழ் மக்கள் அனைவரும் இனம் மொழி கலைகலாசாரம் ஆகிய வாழ்க்கை முறையினால் ஒரே இனமாக விளங்குகின்றனர். நாட்டுப் பேதத்தைவிட தமிழினப் பாசம் மேலோங்குவதால் இதில் நாம் தலையிட்டு கொடுமையைக் கண்டித்து ஆதரவு தெரிவிப்பது எப்படித் தவறு ஆகும்?

அண்மையில் வங்கதேச மக்களது உரிமைக்குரலை ஆதரித்து செயல்பட்டோம். இது பாகிஸ்தானில் தலையிடுவதாக ஆகாது. வங்கத்தில் ஒரு ஆதிக்கக்கூட்டம் உரிமை கேட்ட மக்கள் இனத்தை கொலை செய்கிறது; அதனைத் தடுக்கவே துணை செய்கிறோம் என்று பிரதமர் இந்திரா காந்தி தெரிவித்தார். ...

(தணிக்கை)

... ... ...தமிழின மக்களை நசுக்கி ஒடுக்க சிங்கள ஆதிக்க அரசு முனைகிறது. இதனையும் தடுத்து நிறுத்த இந்திய பிரதமர் முன்வர வேண்டுகிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை அல்ல — மைனாரிட்டிகள் பிரச்சினை அல்ல; சேர்ந்தாற்போல் அண்டை நாடுகளில் வாழும் ஒரு இனத்தின் பிரச்சினை! இது ஒரு பிரதேசப் பிரச்சினை;

இலங்கைத் தமிழர் பிரச்சினை மட்டுமல்ல; ... ... ...

(தணிக்கை)

தமிழும் சிங்களமும் சேர்ந்தது இலங்கை. இரண்டும் இரண்டுபகுதிகள்; இருநாட்டுப் பிரச்சினை என்ற அடிப்படையில்தான் இது தீர்க்கப்படவேண்டும்.

இதை வங்காள தேசத்துடன்கூட ஒப்பிடமுடியாது. ஏனென்றால் அதைவிடப் பல பிரச்சினைகள் இதில் இருக்கின்றன. வங்காள தேசத்தில் ஒரு தனி ஆட்சி இருந்தது. வங்காளிகளை இராணுவத்தில் சேர்க்காமல் உருது மொழியை அவர்கள் மீது திணித்து காலனியாக்கப் பார்த்தது பாகிஸ்தான்;

இலங்கையில் உள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கும் அதன் மற்றப்பகுதிகளுக்கும் நிலத் தொடர்பு தவிர வேறு தொடர்பு எதுவும் இல்லை;

அங்குள்ள தமிழர் சிங்களப் பகுதிகளில் தமிழ் வளர்க்காத காரணம், அவர்களுக்கு ஆதிக்கப்பித்து இல்லாதது தான். அத்துடன் ஆங்கில மோகமும் இருந்தது. சிங்களம் உதைத்த பிறகுதான் தமிழ்மொழி மீது பற்றுவந்தது. இன்று இலங்கை இராணுவத்தில், பொலீசில் போதிய தமிழர் இல்லை;

(தணிக்கை)

தனிநாடு கூடக் கேட்கவில்லை; தனி மாநிலம்தான் கேட்கிறார்கள்; மாநில சுயாட்சிதராவிட்டால்தான் அடுத்த நடவடிக்கையில் இறங்குவார்கள்.

நாம் கேட்கும் சுயாட்சிக்கும் அவர்கள் கேட்கும் சுயாட்சிக்கும் வேறுபாடு உண்டு. நமக்கு ஒரு அரசு, தனிச்சட்ட மன்றம் உண்டு. அவர்களுக்கு இதெல்லாம் கிடையாது.

ஒரு கோடி மக்களுக்கென்று கேரளமாநிலம் இருக்கும்போது, 2½ இலட்சம் மக்களுக்கென்று பாண்டிச்சேரி மாநிலம் தனியாக இருக்கும்போது 30 இலட்சம் மக்களுக்கு தனி மாநிலம் இருக்கக்கூடாதா?

இனங்களின் உரிமைபாதிக்கப்படும் விதத்தில் சிக்கல் மூண்டால் அனுதாபம் காட்டுவோம் என்றார் நமது பிரதமர். ... ... ... ...

(தணிக்கை)

இலங்கைத் தமிழ் நாட்டு மக்கள், தங்களது மொழி, கலை, பண்பாடுகளை பாதுகாத்துக்கொள்ள மேற்கொள்ளும் போராட்டத்துக்கு இந்திய மக்களும் சிறப்பாகத் தமிழ் மக்களும் உறுதுணையாக நிற்போம் என்பது உறுதி.

தமிழ்நாட்டில் தமிழ்இன உணர்வுமிகுந்த டாக்டர் கலைஞரது அரசு நடக்கிறது: அந்த அரசின் வலதுகரமாக நான் இருக்கிறேன். இலங்கைத் தமிழருக்கு உதவிசெய்யுமாறு வற்புறுத்துவதில் கலைஞர் முன் நிற்பார். தமிழினத்தின் துயரைத் துடைப்பதில் அவர் ஒரு சிறிதும் பின்வாங்கமாட்டார்.

வங்கதேச மக்களது உரிமைப்போருக்கு உதவிசெய்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இலங்கைத் தமிழ் மக்களது உரிமைக்கும் உதவவேண்டியது அவசியமாகும். சர்வதேசியம்பேசி இதனைத்தட்டிக்கழிக்க கூடாதென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

'முதலில் இந்தியர்; அடுத்து தமிழர்' என்று நான் வாழ்ந்துவந்தோம். இனி முதலில் தமிழர் அடுத்தே இந்தியர் எனும் உணர்வுடன் தமிழகத்தின் உணர்வுக்கும் உரிமைக்கும் பாடுபடுவோம்- இதனை ஏற்க மறுத்தால், முதலில் ... ... இந்தியராக இயங்க மாட்டோம்.''

### கோகலே மண்டபத்தில் வரவேற்பு

சென்னை சென்றிருந்த தமிழரசுத் தந்தை செல்வாவுக்கும், பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் ஆகியோருக்கும் உலகத் தமிழ் இளைஞர் பேரவை சார்பில் 24-2-72ல் சென்னை கோகலே மண்டபத்தில் மிகச் சிறப்பான முறையில் பொது வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது. விழாவுக்கு உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. இரா. ஜனார்த்தனம் எம். ஏ. தலைமை வகித்தார். விழாவில் அனைவரையும் வரவேற்று கவிஞர்கள் முத்துலிங்கம் மணிமொழி ஆகியோர் பாமாலை பாடினர்.

விழாவில், முன்னாள் இ. தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி, 'மறுவாழ்வு' ஆசிரியர் திரு. வெங்கடேசன், சட்ட மாணவர் வலம்புரி ஜான், பசுபதி தனராஜ் எம். சி. 'பார்வேட் பிளாக்' கட்சித் தலைவர் திரு. ஏ. ஆர். பெருமாள் எம். எல். ஏ. சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், திரு. அ. அமிர்தலிங்கம் தந்தை செல்வா ஆகியோர் உரையாற்றினர்.

### செல்வா பதிலுரை!

தணிக்கை

— இவ்வாறு சென்னை கோகலே மண்டபத்தில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசிய தமிழரசுத் தந்தை செல்வா கூறினார்:

அவர் மேலும் கூறியதாவது:—

நாங்கள் ஈழத்தில் போராடுகிறோமென்றால் அங்கேயிருக்கிற சிறுபான்மையோருக்காக மாத்திரம் அல்ல; அந்த உரிமைப் போரில் நாங்கள் பெறவிருக்கிற வெற்றியும் புகழும் இங்கேயிருக்கிற பெரும்பான்மையோருக்கும் சாரும்.

1942ல் தமிழும் சிங்களமும் சம அந்தஸ்துள்ள மொழிகளாக இருக்கவேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை அவர்கள் ஏற்றார்கள். இலங்கை சுதந்திரம் அடைந்த பிறகு அவர்கள் குணம் மாறிவிட்டார்கள். எங்களுடைய கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிட்டார்கள்.

தமிழர்களுக்கு தரவேண்டிய உரிமைகளை தாருங்கள் என்று கேட்டோம்; எதற்கும் அவர்கள் ஒத்துவரவில்லை.

எல்லா வகையிலும் சிங்களத்துக்கு உயர்வு தருகிறவர்கள், தமிழுக்கு உயர்வு தர மறுக்கிறார்கள்;

வழக்கு மன்றத்தில் எல்லா நடவடிக்கைகளும் சிங்களத்திலேயே நடக்கவேண்டுமென்கிறார்கள். தமிழும் வேண்டும் என்ற எங்களது கோரிக்கையை அவர்கள் ஏற்கவில்லை;

உத்தியோகம் வேண்டுமென்றால் சிங்களத்தை படி என்கிறார்கள்! சிங்களம் படித்தவர்களுக்கு கூட உத்தியோகம் கொடுக்க மறுக்கிறார்கள்; தொழில், உத்தியோகத்துறைகளில் தமிழர்களை புறக்கணிக்கிறார்கள்.

இந்தக்கொடுமைகளையெல்லாம் உலகம் அறிய வேண்டும். இந்தியாவிலிருக்கிற தமிழகம் அறிய வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் நாடு விட்டு நாடு வந்திருக்கிறோம்.

நடந்து முடிந்த சண்டையில் வங்கதேச மக்களைக் காப்பாற்ற அமெரிக்கா முன்வரவில்லை. இங்கிலாந்து முன்வரவில்லை — ஜெர்மன் கூட்டாட்சி முன்வரவில்லை; அவதியுற்ற வங்க மக்களுக்கு இந்தியாதான் துணை நின்றது.

அதே போல, உங்களுடைய ஆதரவுதேவை — இந்தியாவினுடைய அனுதாபம் தேவை.''

—இவ்வாறு செல்வா கூறினார்.

### புதிய...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

30-1-72ல் யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற மகாநாட்டின் தீர்மானப்படி தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக்கப்பட்ட அரசியல் குடியரசு சாசனத்தில் செப்புத்தகட்டில் எங்கள் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களை கையொப்பம் இட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஏறுவூர் தெற்கு கிராம சபை

'சிறுபான்மை மக்களுக்கு போதிய பாதுகாப்புக்கள் அளிக்காத புதிய அரசியல் திட்டச் சாசனத்தில் கைச்சாத்திடாமல் பகிஷ்கரிக்குமாறு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பா. உ. க்களை கேட்டுக்கொள்கிறோம்.'

—ஏறுவூர் தெற்கு கிராம சபை மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது; இவ்வாறான வேண்டுகோளை தத்தம் பகுதி பா. உ. க்களிடம் விடுக்கும்படியும் ஏறுவூர் தெற்கு கிராமசபை தமிழ் ஈழத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களை கேட்டுள்ளது;

ஈழத் தமிழ் நாட்டிலுள்ள ஏனைய ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள் யாவும் புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக தாமதமின்றி குரல் எழுப்ப வேண்டும்-எழுப்பும் என்றும் மெத்த ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறோம்.


**வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்**

எது சுகம்?

''வியாதி இல்லாமல் இருப்பதேயாம்.''

—ஞானி.

வியாதி இல்லாதிருக்க சுத்தமாக இருங்கள். சுத்தமாக இருக்க மில்க்வைற் சோப் பாவித்து உங்கள் ஆடைகளை சுத்தமாக வைத்திருங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

**த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'தமிழர் சுயாட்சி மாநிலம் அமைத்திட போராடும் தமிழர் தந்தையே வாழ்க!'

## செல்வாவுக்கு சென்னை மாநகராட்சி அளித்த சிறப்பு மிகு வரவேற்பு!

### மேயர் காமாட்சி ஜெயராமன் உரை!

தமிழ்நாடு சென்றிருந்த தமிழரசுத் தந்தை செல்வா அவர்களுக்கு 25-2-72 மாலை 5 மணிக்கு சென்னை மாநகராட்சி மன்றம் 'நகர் உபசரிப்பு' அளித்து கௌரவித்தது. இந்த வரவேற்பு விழாவில் தந்தை செல்வாவும், அவருடன் சென்றிருந்த ஏனைய தமிழரசுக் குழுவினரும் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி., மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

தந்தை செல்வா அவர்களுக்கு மாநகராட்சியின் சார்பில் வெள்ளிக் கேடயம் பரிசளிக்கப்பட்டது. மாநகரத்தின் வரவேற்பை ஏற்றவர்களின் சார்பில் குறிப்புப் புத்தகத்தில் தந்தை செல்வா கையெழுத்திட்டார்.

தந்தையை வரவேற்று சென்னை மேயர் திருமதி காமாட்சி ஜெயராமன் நிகழ்த்திய வரவேற்புரை இது.

இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களே! மற்றும், உறுப்பினர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

இலங்கைவாழ் தமிழர்களின் நல்வாழ்விற்கும் — தமிழ் இனம் வாழும் பகுதிகளை இணைத்துத் தனி மாநிலம் அமைக்கவும், மாநில சுய ஆட்சிக் கொள்கை வெற்றி பெறவும் ஆதரவு திரட்டும் பொருட்டு தமிழகத்திற்கு வருகை தந்துள்ள இலங்கை தமிழர் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களையும், மற்றும் இலங்கை தமிழரசுக்கட்சி உறுப்பினர்களையும் எனது சார்பிலும் துணை மேயர் மற்றும் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் சார்பிலும் உளமார வரவேற்கிறேன். உங்களை அனைவருக்கும் சென்னை மாநகராட்சியின் சார்பில் நகர் உபசரிப்பு அளிப்பதில் பெருமையும் பூரிப்பும் அடைகிறோம்.

உலகிற்கே நாகரிகம் கற்பித்து வாழ்ந்தது பண்டைத் தமிழகம். "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற தத்துவத்திற்கிணங்க — தமிழ் பண்பாட்டிற்கு இணங்க — அண்டை நாடுகளுக்குச் சென்று, பண்டமாற்றம் செய்து, முத்தும் மணியும் கொண்டு வந்து குவித்தனர் பண்டைத் தமிழர். காலத்தின் மாற்றத்தால் வாழ்க்கைக்கு வசதிகள் தேடி இலங்கை, மலேயா போன்ற நாடுகளுக்கு குடியேறும் நிலை வந்தது.

வாழ்வதற்கு வந்த நாட்டை வளமாக்க தங்கள் வியர்வை சிந்தி உழைத்து — காடுகளைச் சீர்திருத்தி, கழனிகளாக்கி — மலைப் பகுதிகளைச் சமப்படுத்தி, தோட்டங்களாக மாற்றி — அந்த நாட்டிலே செல்வம் கொழிக்கச் செய்தனர். தலை நிமிர்ந்து வாழ்ந்த தமிழ் இனத்திற்கு — அரசியல் மாற்றங்களால் தங்கள் உரிமைக்கும் மொழிக்கும் சுயமரியாதைக்கும் குரல் எழுப்பி போராடும் நிலை ஏற்பட்டது; அந்த உரிமைக் குரல்களை ஒன்றிணைத்து — அவர்கள் வாழ்வு வளம் பெற — தன் வாழ்நாட்களை அர்ப்பணித்தவர் இலங்கை தமிழர் தந்தை, திரு. செல்வநாயகம் அவர்கள்.

சிறந்த வழக்குரைஞராக தொழில் புரிந்த தாங்கள் தமிழ் இனம் படும் இன்னல்களையும் இடர்பாடுகளையும் கண்டு — 1946ம் ஆண்டில் பொது வாழ்வில் ஈடுபட்டு — தமிழர்களின் உணர்வுகளை — தேவைகளை உணர்ந்து — இலங்கை தமிழர் நலம் காக்க போராடும் விதத்தில் தமிழரசுக் கட்சியை 1949ம் ஆண்டில் தோற்றுவித்தீர்கள்.

தமிழகத்தின் தமிழர்களுக்கு ஏற்பட்ட மொழிப் பிரச்சினை — இலங்கை வாழ் தமிழர்களையும் விட்டதில்லை. இலங்கையில் சிங்களம் தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட போது, போர்க்கொடி உயர்த்தி, அதற்காக சிறைக் காவலில் வைக்கப்பட்டீர்கள். இந்த போராட்டத்தின் வெற்றியாக — தியாகத்தின் பயனாக — உலகிலேயே முதன் முதலில் தனித் தபால் தலை, இலங்கையில் வெளியிடப்பட்டது. இது போன்ற தமிழர் உரிமை காக்கும் போராட்டங்களை நடத்தி, பலமுறை சிறை புகுந்து இன்னல்களை ஏற்றுக்கொண்டீர்கள்.

தமிழர்கள் நலம் பேண — உரிமை காக்க — தன்னலம் துறந்து தியாகம் செய்யும் உங்களை வரவேற்றுப் பாராட்டுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். தமிழரசுக் கட்சியின் கொள்கைகள் வெற்றி பெற, உங்களோடு தோளோடு தோள் நின்று துணை புரியும் மற்றும் உறுப்பினர்களையும் பாராட்டுகிறேன். ... ... ... ... ...

(தணிக்கை)

தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளை இணைத்து தமிழர் சுயாட்சி மாநிலம் அமைக்க, தமிழ் மொழி, சிங்கள மொழியோடு சம உரிமை பெற்றுத் திகழ்ந்திட, தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும், தமிழ் தொழிலாளர்களுக்கு முழு உரிமை வழங்க இந்த முதுமையான வயதிலும பாடுபடும் உங்களை உளமாரப் பாராட்டுகின்றேன்.

சரித்திரப் புகழ் பெற்றதும், பழமைச் சிறப்பு வாய்ந்ததுமான இச் சென்னை மாநகராட்சி மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவதிலும் சென்னை மாநகர் தூய்மையும், அழகும் நிறைந்த நகராக அமைப்பதிலும், தன் திறமைகள் அனைத்தும் பயன்படுத்தி வருகின்றது.

மிகக் குறுகிய காலத்தில் எனது அழைப்பிற்கு இணங்கி, இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை திரும்பிச் செல்லும்போது இனிய நினைவுகளை ஏந்திச் செல்வீர்கள் என பெரிதும் நம்புகிறேன்.

இலங்கைவாழ் தமிழர்கள் நல்வாழ்விற்காகத் தாங்கள் நீண்ட நல் வாழ்வையும் உடல் நலனையும் பெற வேண்டுமென்று பெரிதும் விரும்புகின்றேன்.

இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

# 'ஈழத்துத் தமிழர் பிரச்சினையை டில்லிக்கும் எடுத்துரைப்பேன்'

## சென்னை வரவேற்புக்கு செல்வா பதில்!

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து செல்வநாயகம் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

'உங்கள் மாநகரம் உலகத் தமிழர்களுக்குத் தலைநகரம்போல இருக்கிறது. இப்படிப்பட்டவனை என்னை வரவேற்றுகௌரவித்திருக்கிறீர்கள்.

ஈழத்தில் வசிக்கும் தமிழர்கள் மொழியால் உங்களோடு இணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து என்னை கௌரவிப்பதன் மூலம் ஈழத் தமிழர்களைக் கௌரவித்திருக்கிறீர்கள். திரளாக வந்திருந்து எங்களுக்கு மரியாதை செய்ததன் மூலம் அந்த மக்களுக்கு மரியாதை செய்திருப்பதாகவே கருதுகிறேன்.

தமிழ் மொழி பேசும் மக்கள் 35 லட்சம் பேர் இலங்கையில் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் நாலரைக் கோடி தமிழர்கள் இருக்கிறீர்கள்.

தற்சமயம் ஈழநாட்டுத் தமிழர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளும் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

( தணிக்கை )

இலங்கையிலிருக்கிற தமிழ் வேறு தமிழ் நாட்டிலிருக்கிற தமிழ் வேறு என்ற நிலையை உருவாக்க முயற்சிக்கிறார்கள்.

அங்கே சிங்களமொழியை அரசாங்க மொழியாக்க சட்டம் செய்திருக்கிறார்கள். தமிழுக்கு சிறிய இடம் தான் தரப்பட்டிருக்கிறது. உத்தியோகத்திற்கு சிங்களத்தைப் படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள்.

தமிழர் பகுதிகளிலும் சிங்களத்தையே ஆட்சி மொழியாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். கோர்ட் மொழியாகவும் சிங்களமே இருக்க வகை செய்துள்ளனர்.

இவ்வளவு காலம் கோர்ட்டுகளில் ஆங்கிலம் இருந்தது; இப்போது சிங்களத்தைத் திணிக்கிறார்கள். தமிழர்கள் தமிழில் வாதாட இடம்தர மறுத்துவிட்டார்கள்.

( தணிக்கை )

இலங்கையில் பேசும் தமிழையும் தமிழ் நாட்டில் பேசப்படும் தமிழையும் தொடர்பு இல்லாமல் [illegible] திட்டமிட்டு காரியமாற்றுகிறார்கள்.

தமிழுக்குச் சுதந்திரம்

தமிழ்நாட்டில் நீங்கள் எப்படிப்பட்ட தமிழைப் பேசுகிறீர்களோ அதே போலத்தான் நாங்களும் பேசி வருகிறோம்.

நீங்கள் புதுப் புதுச் சொற்களைக் கண்டு பிடித்தால் அதையே நாங்களும் பயன்படுத்துகிறோம்.

ஆனால் இப்போது சிங்களத்தை தமிழில் புகுத்தும் முயற்சி நடக்கிறது.

இலங்கையில் புதிய அரசியல் திட்டத்தை அமைத்திருக்கிறார்கள். அதில் தமிழுக்கு— தமிழர்களுக்கு எந்தவிதச் சலுகையுமில்லை. அதனால்தான் சுயாட்சி கேட்கிறோம். இந்த சந்ததியில் இல்லாவிட்டாலும் அடுத்த சந்ததியிலாவது தமிழர்களுக்குச் சுதந்திரம் கிடைக்கப் பாடுபடுவோம்!

இந்த விஷயத்தை விளக்கத்தான் தென்னிந்தியாவிலுள்ள உங்களிடம் வந்திருக்கிறோம்.

நாங்கள் இந்த இயக்கத்தை விஷயத்தை புதுடில்லிக்கும் கொண்டு போவோம்!

இப்படி நாங்கள் [illegible] பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று நம்புகிறோம்!

# 'விளையாட்டுத் துறையிலும் தமிழுக்கு இடம் தருக'

## கல்லூரி முதல்வருக்கு வேண்டுகோள்

'தங்கள் கல்லூரி பங்கு பெறும் பெரும் போட்டிகளில் ஒலிபெருக்கிவர்ணனைகள் மட்டும் அல்லாது அங்கு இடம்பெறும் மெல்லிசை கூட தமிழ் நாதஸ்வர, புல்லாங்குழல் இசையாக அமைவதை வரவேற்கிறோம். இவ்வாண்டில் நுழைவுச் சீட்டுகள், நிகழ்ச்சி நிரல்கள், உத்தியோகத்தர் பட்டிகள் யாவும் தமிழாக மாறுமென எதிர்பார்க்கிறோம்.

விளையாட்டுத் துறையில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தங்களைப் போல வேறு எவராலும் ஊக்கம் கொடுக்க முடியாது. ஏனையவர்கள் தமிழ் உரிமை குறித்துப் பேசுவதோடு நின்றுவிடுவார்கள். தங்களிடம் இருப்பது போன்ற ஆக்க சக்தி அவர்களிடம் கிடையாது;

காரணம், விளையாட்டுத் துறையில் போன்று பிற துறைகளிலும் தமிழை வளர்ப்பதாயின், அது வெறும் பண்டிதர்களால் மட்டும் நடை பெறக் கூடிய காரியம் அல்ல. அந்தந்தத் துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் மனம் வைத்தால் மட்டுமே அது நடைபெறும். எனவே, விளையாட்டுத்துறையில் தமிழை வளர்க்கும் பணி மாணவர்களால் மட்டுமே கைகூட முடியும்; இவ்வித ஆக்கபூர்வமான பணிகளில் தமிழ் மாணவ சமுதாயத்தை ஆற்றுப்படுத்தக் கூடிய நிலையில் தாங்கள் உள்ளீர்கள்.

ஆகவே, மாணவர் மத்தியில் கல்லூரி இல்லக்குழுக்கு இடைப்பட கிரிக்கட் பெரும் போட்டிகளில் சுலோகிக்கக் கூடிய தமிழ்ப் பதங்களை உண்டாக்குவதற்கான போட்டா போட்டிகளைக் கல்லூரி விளையாட்டுத்துறை முதல்வர்களூடாக மேற்கொள்ளல் வேண்டும். பரிசுகளும் வழங்கப்படலாம் மாணவர்களது உற்சாகத்தைத் தட்டிக் கொடுப்பதற்காக.

—இவ்வாறு கல்லூரி முதல்வர்களுக்கு யாழ் தமிழ்க் கழக செயலாளர்கள் எஸ். லோகநாதன் சா. ஆ. தருமரத்தினம் ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர்.

## மூதூர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் கூறியதுபோல் சேருவில் டி. ஆர். ஓ. பிரிவை மூதூர் தொகுதியில் இருந்து பிரித்து வேறு தனித் தொகுதியாகமாற்ற விரைவில் முயற்சி எடுங்கள், என்று கூறி அந்தத் தமிழ் இனத்திற்குக் குழிதோண்டிய தாங்களா இன்று இலங்கைத் தமிழர் நிலைபற்றிக் கூறுகின்றீர்கள், கேட்கவே வேடிக்கையாக இருக்கிறது;

உங்கள் திருகுதாளங்கள் மக்களுக்குப் புரியும் தினபதியார் போல் அம்மா தூங்கியிருந்து கூலிக்கு மாரடித்து வயிற்றைக் கழுவுங்கள்;

## வட்டுக்கோட்டை..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை தாங்க வரவில்லை. தனது பாரியாரை மட்டும் அனுப்பி விட்டு தான் ஒதுங்கிக்கொண்டார். திருமதி தியாகராசா மேடைப்பக்கம் எட்டியும் பார்க்காது பெண்கள் மத்தியில் சிறிது நேரம் இருந்து விட்டு போய் விட்டார். வாலிபர்களின் எதிர்ப்பு வெற்றி பெற்றதை பற்றி பெரியார்கள் பலர் பாராட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பூரண சுயாட்சி பெறவே ஈழத்தில் நாம் போராடுகிறோம்!'

## சென்னை பத்திரிகை நிருபர்களுக்கு செல்வா அளித்த சிறப்புப் பேட்டி!

"கலைஞர் கருணாநிதி கைவிரித்துவிட்டார்; எனவே செல்வா ஏமாற்றத்துடன் தமிழ் நாட்டிலிருந்து இலங்கை திரும்பினர் என்றெல்லாம் வெந்ததை தின்று வாயில் வந்ததை உமிழும் சோற்றுப் பிண்டங்கள் நஞ்சு கக்கி வருகின்றன இங்கு; ஆனல் தமிழ்நாட்டில் தந்தை செல்வா கலந்துகொண்ட நிகழ்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பெரிய அளவில் செய்திகளும் விமர்சனங்களும் எழுதியது கலைஞர் கருணாநிதியின் பத்திரிகையான 'முரசொலி' நாளேடுதான். சென்னையில் செல்வா தங்கியிருந்தபோது, அனைத்துப் பத்திரிகைகளின் செய்தியாளர்களுக்கும் பேட்டியளித்தார்: தந்தையின் பேட்டி, இந்து, எக்ஸ்பிரஸ், மெயில், டெக்கான் ஹெரால்ட், ஆகிய ஆங்கில நாளேடுகளிலும் சகல தமிழ் தினசரிகளிலும் வெளிவந்ததிருந்தன. 'முரசொலி' 24.2.72 இதழில் வெளிவந்த பேட்டியை அப்படியே இங்கு சுதந்திரன் வாசகர்களுக்குத் தருகிறோம்.

சென்னை, பெப். 24—

"இலங்கை கூட்டாட்சிக்குள் அடங்கிய தனித் தமிழ் மாநிலமே கேட்கிறோம். முழு சுயாட்சி உள்ள மாநில அரசு அமைக்க அகிம்சை வழியில் போராடுவோம்! அதற்கு தமிழக மக்களின் ஆதரவு மட்டுமின்றி இந்திய மக்களின் ஆதரவும் எங்களுக்குத் தேவை" என்று ஈழத்துக் காந்தி செல்வநாயகம் செய்தியாளர்களிடம் பேசும் போது கூறினர்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் நிறுவனரும் இலங்கைத் தமிழர் தலைவருமான எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை நேற்றுச் செய்தியாளர்கள் காலையில் சந்தித்தனர்: 1947லிருந்து இலங்கைப் பாராளுமன்ற அவையில் உறுப்பினராகப் பதவிவகித்து வருபவர் அவர். தற்போது தமிழகத்துக்கு வந்திருக்கும் நோக்கம் பற்றி செய்தியாளர்கள் அவரிடம் கேள்விகள் கேட்டார்கள். தமிழகத்தில் அவர் யார் யாரைச் சந்தித்தார் என்பது பற்றியும், இலங்கைத் தமிழரின் நிலை பற்றியும், இலங்கைத் தமிழரசுக்கட்சி கோரும் உரிமைகள் பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன.

செய்தியாளர்களின் கேள்விகளுக்கு எஸ். ஜே. வி. செல்வநாயகம் பதிலளிக்கையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஏ. அமிர்தலிங்கமும் உடனிருந்து உதவினர்.

எழுபத்தி நான்கு வயதான செல்வா அவர்கள் தாமே ஒவ்வொரு கேள்விகளுக்கும் சரியான விளக்கங்களைக் கூறி செய்தியாளர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

அவரது பதில்களில் அடங்கியிருந்த விவரங்கள் வருமாறு:-

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக இங்கு வந்துள்ளேன். இப்போது இலங்கை அரசு ஒரு புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கி இருக்கிறது. அந்தச் சட்டம் முழுவதும் இலங்கைத் தமிழருக்கு விரோதமானதாக இருக்கிறது.

இன்னும் இரண்டொரு மாதங்களில் அந்தச் சட்டம் அமுலுக்கு வர இருக்கிறது.

### கோரிக்கைகள் நிராகரிப்பு

தற்போது உள்ள இலங்கை நாடாளுமன்றம் தான் அரசியல் நிர்ணயசபையாகவும் செயல்பட்டு இந்தப் புதிய அரசியல் சட்டத்தை பரிசீலிக்கிறது.

எங்கள் கட்சியினர் பதின்மூன்றுபேர் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாகி இருக்கிறோம்; இந்த அரசியல் சட்டத்தில் சமர்ப்பித்த அந்தத் திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன; எனவே தொடர்ந்து அரசியல் நிர்ணயசபையில் உட்கார நாங்கள் விரும்பவில்லை;

அதனல் கடந்த மூன்று மாத காலமாக தமிழரசுக் கட்சியினராகிய நாங்கள் அ. நி. சபையை விலக்கி வைத்திருக்கிறோம்;

இலங்கையில் வெள்ளையர் ஆண்ட போது எல்லா நீதி மன்றங்களிலும் ஆங்கிலமே இருந்தது. ஆனல் இப்போது அனைத்தும் சிங்களமாகி விட்டது. குறைந்த பட்சம் தமிழர்கள் இருக்கும் பகுதிகளிலாவது தமிழ் இருக்கவேண்டும் என்று கேட்டோம். அதையும் நிராகரித்து விட்டனர்.

இலங்கையில் 30 சதவீதம் தமிழர்கள் உள்ளனர் ஆனல் சிங்களம் தான் ஆட்சிமொழி.

தமிழுக்கு தக்க இடம் தரப்படும் என்று 1958ல் இருந்த பண்டாரநாயகா அரசு ஒரு சட்டம் கொண்டு வந்தது. ஆனல் அதனை இப்போதுள்ள அரசு அமுலாக்கவில்லை. புதிய அரசியல் சட்டம் வந்து புதிய நாடாளுமன்றம் கூடிய பிறகுதான் அதை பரிசீலிக்கப்படுமாம்:

—இவ்வாறு நிருபர்களிடம் பேசுகையில் அவர் தெரிவித்தார். மேற்கொண்டு நிருபர்கள் கேட்ட கேள்வியும் அதற்கு செல்வநாயகம் அளித்த பதில்களும் வருமாறு:

### சர்வதேச பிரச்சினை

கேள்வி: இங்கு தலைவர்களைச் சந்தித்துப் பேசினீர்களா?

பதில்: தமிழக கவர்னர்; முதலமைச்சர், மற்றும் அமைச்சர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள் தந்தை பெரியார். சிலம்புச் செல்வர் ம. பொ. சி. பக்தவத்சலம் காயிதேமில்லத், ஆகியோரையும் சந்தித்தேன்.

தமிழக மக்களின் ஆதரவு மட்டுமல்ல: இந்திய மக்களின் ஆதரவும் இன்று இலங்கைத் தமிழருக்குத் தேவைப்படுகிறது. இங்கு நான் சந்தித்துப் பேசியவர்கள் எங்கள் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டார்கள். ஆனல் அது உள்நாட்டு விவகாரம் இதிலே தலையிட முடியுமா என்று சிலர் தயங்கினர்: அவர்களிடம் நான் இது சர்வதேசப் பிரச்சினையாக வரும். அந்த நேரத்தில் நீங்கள் தலையிடலாம் என்று சொன்னேன்.

கேள்வி: இந்தப் பிரச்சினை ஐ. நா. சபைக்குப்போகுமா?

பதில்: இது உள்நாட்டுப் பிரச்சினை என்பார்கள்.

கேள்வி: ஒரு இனம், ஒரு மொழியினரின் அடிப்படை மனித உரிமைகள் பறிக்கப் படும்போது ஐ. நா. சபை தலையிட முடியாதா?

பதில்: வங்க தேசப் படுகொலை அளவுக்குப் போனால் தான் ஐ. நா. சபை [illegible] ஆனல் வங்கதேசத்தில் 30 லட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்ட போதே ஐ. நா. சபை வரவில்லையே அது எங்கே எங்களுக்கு ஆதரவாக வரப் போகிறது? நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

(தணிக்கை)

### நாங்கள் கேட்பது!

கேள்வி: நீங்கள் தனி நாடு கேட்கிறீர்களா?

பதில்: இன்னும் எங்கள் கட்சியின் கொள்கை முழு சுயாட்சியுடன் கூடிய தமிழ் மாநிலங்கள் இணைந்த இலங்கை சமஷ்டி தான். சமஷ்டி அரசுக்குள் அடங்கிய தனித்தமிழ் மாநிலம் தான் கேட்கிறோம்; அந்த மாநிலத்திற்கு தனி முதலமைச்சர், அமைச்சரவை தனி சட்டசபை தேவை. இப்போது மாநிலங்கள் அனைத்தும் இலங்கை மத்திய அரசில் உள்ளன; மாநிலங்களில் தனி அரசு எதுவும் இல்லை.

இந்தியாவில் முழு சமஷ்டி அரசு இருக்கிறது: ஆனல் இங்குள்ள ஒரு மாநில அரசு, பூரண சுயாட்சிக்காகத் தீர்மானம் போட்டு அதை நிலை நாட்டிக்கொள்ள முடியாது:

ஆனல் எங்கள் திட்டம் மாறுபட்டது. நாங்கள் பூரணசுயாட்சி கேட்கிறோம்.

மத்திய அரசுக்கு பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு, கரன்சி தகவல் தொடர்பு ஆகியவைகளை விட்டுவிட்டு மீதித் துறைகளில் முழு சுயாட்சி கேட்கிறோம்: இதற்காக நாங்கள் ஒரு அரசியல் சட்டமே தயாரித்துக்கொடுத்தோம்.

(தணிக்கை)

புதிய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்தால் அந்த நாள் இலங்கைச் சரித்திரத்தில் குறிப்பாக இலங்கை தமிழர் வரலாற்றில் ஒரு முக்கியமான நாளாகும்:

கேள்வி: இலங்கையில் உள்ள எல்லாத் தமிழர்களின் கருத்துக்களையும் அறிந்து கொண்டுவிட்டீர்களா?

பதில்: பெரும்பான்மைதமிழர்களின் ஆதரவு எங்கள் கட்சிக்குத் தான் உண்டு.

இலங்கைப்பாராளுமன்றத்தில் உள்ள 19 தமிழ் எம். பி.க்களில் 13 பேர் எங்கள் கட்சிக்காரர்கள்:

இவ்வாறு அவர் கூறினர்.

---

# பாடுபடும்பாட்டாளிகளுக்கு....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி! ஏன்? 'ஏழு மணியானல் வீட்டுக்கு விரட்டிவிடுவார்களே கண்டக்டர்மார்' என்ற மனபயம். அதுமட்டுமல்ல! 'ஒருநாள் வேலை போனல் ஒன்பதுபேர் வீட்டிலிருந்துகொண்டு எப்படி சாப்பிடமுடியும்?' என்ற உள்ளத்துணர்ச்சியுமகூட!

பின்னர் பத்து மணிக்கு கொழுந்து நிறுப்பதற்கு— மலைஅடிவாரத்திலிருந்து மலையின் உச்சிக்கு ஏறிவரும் தளிர்க்காரல்களை—கொளுத்தும் வெயிலில் கண்ணுறும் எந்த ஒரு ஆண்மகனும் மனம் புண்படாமல் இருக்கமுடியாது!

கொழுந்து பறிப்பதே கஷ்டம். கைகள் புண்ணாகிவிடும்! அதிலும் அதை நிறுப்பதற்குள்ளோ 'வான மண்டலத்தையே' சுற்றி வந்துவிடலாம் போன்ற களைப்பு!

இத்தனையும் அனுபவித்த பின்னர், பகல் சாப்பாட்டிற்கோ வீட்டிற்குப் போகக்கூடாது! மழலைக் குழந்தை [illegible] கூடாது! [illegible] கொழுந்தெடுப்பர்! அவர்களுக்கு 'தேத்தண்ணி' தூக்க பள்ளி செல்லவேண்டிய பாலகன் (மகன்) — அடுப்பூதி, ரொட்டி போட்டு, மலையுச்சியிலிருந்து மலை அடிவாரத்திற்குக் கொண்டுபோய் கொடுக்கவேண்டும்! அதிலும் மழை வந்துவிட்டால் அவர்களின் சாப்பாட்டை 'பரமேஸ்வரன்' தான் பார்வையிடவேண்டும்!

அதன்பின்னர், மாலைவரை காய்ந்துபோன தேயிலையைப் பிடுங்கி— அதை 'மடுவத்துக்கு'' தூக்கிக்கொண்டு வந்தாலோ — ''ராமாயி உனக்கு ராத்தல் குறைவு! நாளைக்கு புல்லு வெட்டப் போ!' — ஏ! பொன்னம்மா, நீ ஏன் முப்பது ராத்தல் எடுக்கல? ஒனக்கு நாளைக்கு வேலை இல்லே!'

ஆம்! காலை ஆறு மணிமுதல் மாலை ஏழு மணிவரை மலையிலே கால்கடுக்க நின்று— கூடை நிறைய கொழுந்து எடுத்தும் — சற்றிலே புல்லு வெட்டு! மறுநாள் வேலை இல்லை!

இதுதான் தொழிலாளர் கண்ட 'தொழிற்பயன்!' தொழிற்சங்கங்கள் செய்யும் சேவையின் பலன்!

'நாட்டிற்கு எண்பத்தைந்து சதவீத வருமானத்தைத் தேடித்தரும் இம்மலையகப் பாட்டாளிகளோ ஒழுங்காக உண்பதில்லை! சீராக உடையும் அணிவதில்லை? ஏன்? தம் பச்சிளம் பாலர்களை பாடசாலைக்குக்கூட அனுப்ப 'விதி' —'சதி' செய்கின்றது: இல்லை! முதலைக் கண்ணீர் வடிக்கும் முதலாளிகள்— ஏய்த்துப் பிழைக்கும் ஏமாற்றுப் பேர்வழிகள்- பகைவராகும் எண்ணங்கொண்ட பகைவர்கள்- காசு சேர்க்கும் எண்ணமொன்றையே குறிக்கோளாகக்கொண்ட கயவர்கள் திட்டமிட்டுச் செய்யும் சதியின் விளைவே இப்பாட்டாளிகளின் இன்றைய கேடு கெட்ட நிலை!

பாடுபடும் பாட்டாளிகளுக்கும் இந்தக் கேடு கெட்ட சூழ் நிலையா? இதை மாற்றியமைக்க - தொழிலாளர்களுக்கு விமோசனமளிக்க- அவர் தம் சுதந்திரத்தைப் பாதுகாக்க - "பல்லவி" யுடன் 'தொகையறு'க்களையும் சேர்த்துப் பாடும் தொழிற்சங்கங்கள் முன்வருமா?

பாட்டாளிகளுக்கு விடிவு காலம் பிறக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5வது ஜனத்திரள் வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்நகர்)

எம். ஜி. ஆர்.
பத்மினி
மஞ்சுளா
— நடித்த —



# ரிக்ஷாக்காரன்

(ஈஸ்மன் கலர்) இசை: எம். எஸ். விஸ்வநாதன்

இப்பொழுது காட்சியளிக்கிறது
— கிங்ஸ்லி — (கொழும்பு)

சிவாஜி
சௌகார்ஜானகி
நம்பியார்
எஸ். வி. சுப்பையா
— நடித்த —



# காவல் தெய்வம்

---

சிலோன் என்டடெயின்ஸ்மென்ட்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது



4வது வெற்றி மாதம்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

நடிகர் திலகத்தின் 150வது வெற்றிச் சித்திரம்

சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்
விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி
வி. எஸ். ராகவன் நடிக்கும்

(ஈஸ்மன் கலர்)

# சவாலே சமாளி

---

சிலோன் தியேட்டர்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) இம்பீரியல் (மட்டுநகர்) வின்சர் (யாழ்நகர்)

ஜெய்சங்கர் ரவிச்சந்திரன்

நாகேஷ், மனோகர், சௌகார்ஜானகி, வாணிஸ்ரீ, விஜயலலிதா
மற்றும் பலர் நடித்த

# நான்கு சுவர்கள்

(ஈஸ்ட் மன் கலர்) கதை—வசனம்—டைரக்ஷன்:- கே. பாலசந்தர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயக்கா வீதி 194 ஏ. இலக்கத்தில் 1972-ம் வருடம் மார்ச் மாதம் 19-ம் திகதி [illegible] பிரசுரிக்கப்பட்டது. —ஆசிரியர் கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org